மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 4 ★ 26-5-57 சென்னை ★ விலை 16 காசு

"சோஷியலிச மாதிரியில்"

ஒருவன் குதிரை வாங்குவதற்காகச் சந்தைக்குப்போனான். நல்ல குதிரையாகவாங்கி வரும்படியாகச்சொல்லி, அவனது குடும்பத்தார்களும் ஏராளமான பணத்தைக் கொடுத்து அனுப்பினார்கள். காலையில் சென்றவன் மாலையில் தான் திரும்பினான்.

"என்னப்பா! குதிரை வாங்கி வந்தாயா?" குடும்பத்தார்கள் ஆவலுடன் கேட்டார்கள்.

"ஓ! வாங்கி வந்து விட்டேனே!" கொஞ்சம் இராகம் போட்டே சொன்னான். இராகம் போட்டானென்றால் அவனுக்குச் சங்கீதம் தெரியுமென்று அர்த்தமல்ல, அவன் சாப்பிட்டிருந்த 'சரக்கு' தந்த இராகம் அது! எக்காளத்துடன் அவன் சொன்ன பொழுது ஏப்பம் வந்தது, "தென்னம்பாளை வடித்த தேன்" வாடை குப்பென்று வீசியது!

"எவ்வளவு கொடுத்தாய்?"

வரிக்குமேல் வரி!

"நூறு ரூபாய்!" மீசையை முறுக்கிக் கொண்டான்.

"குட்டியா, கிழடா?" விலை குறைவாயிருந்ததும் ஏதாவது கிழடு, நொண்டி முடத்தை வாங்கிவந்தானோவென்ற சந்தேகம் அவர்களுக்கு இருந்தது.

"குட்டிதான்! பாருங்கள் எவ்வளவு குறைந்த விலையில் வாங்கி வந்தேன்! சந்தையில் புகுந்து வருவதென்றால் சாமான்யமில்லை." தள்ளாடி வந்து அவன் உட்கார்ந்தான்.

குடும்பத்தார்கள் ஆவலுடன் வெளியே வந்து பார்த்தார்கள். கொட்டிலில் நின்ற உருவத்தைப் பார்த்ததும் அவர்கள் திடுக்கிட்டார்கள். "அடபாவி! குதிரை வாங்கி வரச்சொன்னால்..."

சந்தைக்குப்போய் வந்த கைகாரன் சாவதானமாகப் பார்த்தான் "ஆமாம்! குதிரை மாதிரி இருப்பதை வாங்கிவந்தேன்!"

குதிரை வாங்கி வரச் சொல்லி அனுப்பினால் குதிரை மாதிரி இருக்கும் மிருகத்தை அவன் வாங்கி வந்து விட்டான்.

"அடபாவி! அரும்பாடு பட்டுச் சேர்த்த பணத்தை, வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி. உண்ணாமல் உறங்காமல் உட்காராமல் நிற்காமல் பாடுபட்டுச் சேர்த்த பணத்தைக் கொட்டிக்கொடுத்து, குதிரைவாங்கி வரச் சொன்னால் நீ போய் குதிரை மாதிரி இருக்கிற மிருகத்தை வாங்கி வந்து கும்மாளம் போடுகிறாயே! குட்டியாம், குறைந்த விலையாம், பாக்கிப்பணம் எங்கேயடா?"

"போ போ! பாக்கிப் பணம் பாளைக் காரனிடம் இருக்கிறது! சும்மா சத்தம் போட்டால், எனக்குக் கோபம் வரும்! அப்புறம் என் பக்கத்தில் வந்தவன் கால் முறியும், கை உடையும்; ஆமாம்!" போதை வெறியில் அவன் உரத்துப்பேசினான். பாக்கிப்பணம் பாளை சீவுபவனிடமும், பட்டை சாராயக்காரனிடமும் போய்விட்டது என்பது தெரிந்தது. போதையில் இருப்பவன் பக்கத்தில் யார் போய் பேசமுடியும்?

குதிரைமாதிரி இருந்த மிருகமும் நீண்ட செவிகளை உயர்த்தி, வெள்ளி மூக்கை விரித்து தனக்கே உரித்தானகுரலில் கானம் பயிலத் தொடங்கியது! ஊரார் வெளிவந்து குதிரைமாதிரி மிருகத்தை வாங்கிவந்த கோமாளியைப் பார்த்துச் சிரித்தனர், குதிரை வாங்கப் பணத்தைக் கொடுத்து அனுப்பிய குடும்பதினர் பணத்தையிழந்து கண்ணீர் விட்டனர்!

* * *

குதிரை மாதிரியில் ஒன்றைக் கொண்டு வந்து நிறுத்தியதைப்போல், "**சோஷியலிச மாதிரியில்**" ஒரு புது அரசியலை இந்த நாட்டு அரசியல் கொட்டிலில் காங்கிரசுகட்சி கொண்டுவந்து நிறுத்தியது. உண்மையான குதிரைக்கும், குதிரைமாதிரி இருக்கும் மிருகத்துக்கும் எவ்வளவு ஏற்றத்தாழ்வுகள் உண்டோ, அவ்வளவு ஏற்றத்தாழ்வு உண்மையான சோஷியலிசத்திற்கும், காங்கிரசு கொண்டு வருகிற "சோசியலிச மாதிரிக்கும்" இருக்கிறது!

(2-ம் பக்கம் பார்க்க)

"தவறைத்" திருத்த!

இந்திய அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத்திட்டத்தில் மொத்தம் 112 வரியினங்கள் புதிதாகவும் அதிகமாகவும் ஆக்கப்பட்டன. வரவு செலவுத் திட்டத்தை மக்கள் சபையில் சமர்ப்பித்த இரண்டு நாட்களுக்கெல்லாம் காகிதத்தின் மீதும், மண்ணெண்ணெய் மீதும் போடப்பட்ட வரிஉயர்வை எடுத்துவிட்டதாக கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அறிவித்தார். அதற்கு அவர் தந்த காரணங்கள் வேடிக்கையானவை.

"சிறிய தவறின் காரணமாக" காகிதத்தின் மீது இருக்கும் வரியை அதிகப்படுத்தியதாகவும், அந்தத் "தவறை" திருத்தி பழைய நிலைக்கு கொண்டுபோவதாகவும் கனம் கிருஷ்ணமாச்சாரியார் சொன்னார். ஒரு பெரிய அரசாங்கத்தில், மிக முக்கியமான வரவு-செலவுத் திட்டத்தில் இத்தகைய "தவறுகள்" நுழையலாமா? அல்லது நுழையத்தான் முடியுமா? ஒருவேளைப் பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு பயத்தைத்தர முதலில் போட்டு பின் எடுத்து விடுவதற்காக வைக்கப்பட்ட "தவறாக" இருந்தாலும் இருக்கலாம்! யார் கண்டது?

மண்ணெண்ணெய்க்கு நிதிமந்திரி வரி போட்டார், அவரை முந்திக் கொண்டு கடைக்காரர்கள் அதிகமாக வசூல் செய்ய ஆரம்பித்து விட்டார்களாம். நிதிமந்திரியார் மண்ணெண்ணெய்க்கு விதித்த வரி "ஒரு பாட்டிலுக்கு புதிய காசில் ஐந்தில் ஒன்றாகும்." கடைக்காரர்கள் ஐந்தில் ஒரு பாகம் காசு வாங்குவதை விட்டு, ஒருபாட்டில் எண்ணெய்க்கு 1காசு, 2காசு, 3காசு என்று வாங்க ஆரம்பித்தார்களாம்! அதைத் தடுக்க நிதிமந்திரியார் எண்ணெய்க்குப் போட்ட புதிய வரியை நீக்கிவிட்டார்!

ஒட்டகத்தின் மீது பொதி மூட்டைகளைப் போடும்பொழுது, அனுப்ப வேண்டியதற்கு மேலாக இரண்டு மூன்று "போலி" மூட்டைகளைப் போடுவார்களாம். பொதிச்சுமை அதிகமாயிருப்பதைக் கண்டு ஒட்டகம் படுத்துக் கொள்ளும். உடனே தயாராகப் போடப்பட்டிருக்கும் "போலி" மூட்டைகளைக் கீழே தள்ளிவிடுவார்களாம்! பாரம் குறைந்துவிட்டதாக நினைத்து, ஒட்டகம் எழுந்துபோக ஆரம்பிக்குமாம்! அதைப்போல, தாங்க முடியாத வரிச்சுமைகளை மக்களின் தலையில் கட்ட நினைத்த நிதிமந்திரியார், இரண்டு வரிகளைத் "தவறுகளாக" வைத்து பின் கீழேதள்ளி ஒட்டகத்தை எழுப்பப் பார்க்கிறார்!

தான் செய்த "சிறிய தவறை" கனம் கிருஷ்ணமாச்சாரியார் திருத்திக்கொண்டார். மிக நல்லது! மக்களும் "ஒருசிறிய தவறைச்" செய்துவிட்டார்கள். அதைத்திருத்திக்கொள்ள அவர்களுக்கு அவர் ஒரு சந்தர்ப்பம் தந்தால் நன்றாயிருக்கும். அதுதான் இவ்வாறெல்லாம் வரிகளைப் போடுவாரென்று தெரியாமல் அவரை மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியது! அந்தத் "தவறைத்" திருத்திக்கொள்ள மிக விரைவில் தென் சென்னை மக்களுக்குக் கனம் கிருஷ்ணமாச்சாரியார் ஒரு சந்தர்ப்பம் அளித்தால் நன்றாயிருக்கும்!

புதிய வரிகள்!

★

வரி விதிக்கப்படும் பொருள்.	முன்னைய வரி விகிதம்	அதிகரிக்கப்பட்ட வரி விகிதம்.	கூடுதலாகக் கிடைக்கும் மொத்த வரிப்பணம்.
1. சர்க்கரை	அந்தர் ஒன்றுக்கு ரூ. 5-62 காசு	ரூ. 11-25 காசு	18 கோடி 55 லட்சம்.
2. தேயிலை			
—உதிரித் தேயிலை	பவுண்டு ஒன்றுக்கு ரூ. 6-25 காசு	10 காசு	
—உதிரித் தேயிலை செப்பனிடப்பட்டால்	,, 18-75 காசு	35 காசு	2 கோடி 45 லட்சம்.
—செப்பனிட்ட தேயிலை	,, 25 காசு	45 காசு	
3. காபி.	பவுண்டு ஒன்றுக்கு ரூ. 18-75 காசு	35 காசு	80 லட்சம்.
4. புகையிலை.			
—கச்சா புகையிலை.	பவுண்டு ஒன்றுக்கு 37 காசு	50 காசு	
—பக்குவம் செய்யப்படாத சிகரெட் அல்லது குழாய்ப்புகையிலை	,, 56 காசு	75 காசு	6 கோடி 15 லட்சம்.
—வேறு விதமாக உள்ளது	,, 87 காசு	100 காசு	
5. தீப்பெட்டி,	வரி சேர்த்துப் பெட்டி விலை 3 காசு	4 காசு	6 கோடி 20 லட்சம்.
	,, 4 காசு	6 காசு	
6. தாவர எண்ணெய்கள்.	வரி டன் ஒன்றுக்கு ரூ. 70	ரூ. 112	3 கோடி 15 லட்சம்.
7. மண்ணெண்ணெய்.	காலன் ஒன்றுக்கு 18-75 காசு	20 காசு	20 லட்சம்.
8. பெட்ரோல்	,, 98 காசு	125 ,,	6 கோடி 65 லட்சம்.
9. டீசல் எண்ணெய் (செம்மைப்பட்டது)	,, 25 காசு	40 ,,	1 கோடி 90 லட்சம்.
10. டீசல் எண்ணெய் (செம்மைப்படாதது)	டன் ஒன்றுக்கு ரூ. 30	ரூ. 40	35 லட்சம்.
11. சிமெண்ட்	டன் ஒன்றுக்கு ரூ. 5	ரூ. 20	6 கோடி 70 லட்சம்.
12. உருக்குக்கட்டி	,, ரூ. 4	ரூ. 40	5 கோடி 70 லட்சம்.
13. காகிதம்.	எல்லாவகைகளின் மீதும்.		2 கோடி

இந்த வகைகளில் கிடைக்கும் மொத்த வரிப்பணம் 60 கோடி 80 லட்சம்.

இந்த 60 கோடி 80 லட்சம் ஒரு முழு ஆண்டுக்கு ஏப்ரலிருந்து மார்ச்சுவரைக் கணக்கிடப்பட்டது. ஆனால் இரண்டு மாதங்கள் கடந்துவிடுமாதலால் எஞ்சியுள்ள ஆண்டுக்குள் 53 கோடி 20 லட்சம்தான் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக 1957-58ல் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய வரிப்பணம் :—

13 கலால் வகைப் பொருள்களில் கிடைக்கும் அதிக வரிப் பணம்	53 கோடி 20 லட்சம்.
சுரங்கவரியில் 90 பொருளின்மீது கிடைக்கும் அதிக வரிப்பணம்	6 கோடி
தபால் கார்டு, தந்தி விலை உயர்வால் கிடைக்கும் அதிகப் பணம்	85 லட்சம்.
வருமான வரி, கம்பனி வரி வகையில் கிடைக்கும் அதிகப் பணம்	25 கோடி
இரயில்வே கட்டண உயர்வால் கிடைக்கும் அதிகப் பணம்	8 கோடி
1957-58-ல் வசூலிக்கப்படும் அதிக வரிப் பணம்	**93 கோடி 5 லட்சம்.**

இதில் மாநிலங்களுக்கு 15 கோடி 20 லட்சம் பங்கிட்டுத்தரப்பட்டபின், மிகுதி 77 கோடி 85 லட்சம் ரூபாய் மத்திய அரசாங்கத்துக்கு அதிகப்படியாக இந்த ஆண்டு கிடைக்கும்.

நிதித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபின், மண்ணெண்ணெய் காகிதம் இவைகளின்மீது புது வரிகள் விதிக்கப்படமாட்டா என நிதி மந்திரி அறிவித்திருக்கிறார்.

...திரை வாங்கச் சென்றவ...கு அவனுடைய குடும்பத்... தாங்கள் பாடுபட்டு ...த்துவைத்த பணத்தைத் ...து அனுப்பியதுபோல, ...ட்டுக்கு நல்லதொரு எதிர் ...லத்தை வாங்கிவருவார்'' என்ற நம்பிக்கையில் ...கிரசுக்கு பலவிதத்திலும் ...ரவு தந்து, ஆட்சிக்கு ...கள் அனுப்பிவைத்தார் இன்று நேற்றல்ல, பன் ...டுங்காலமாக காங்கிரசுக்கு ...ரவுதர ஆயிரக்கணக் கானவர்கள் தியாகங்கள் பல செய்தார்கள். சிறையேற்றனர், சீரழிந்தனர், செக்கிழுத்தனர், பலர் தங்கள் உயிரையே காணிக்கையாகத் தந்தனர். அவர்கள் அந்தப் பழைய காங்கிரசுக்காரர்கள் —இப்பொழுது காங்கிரசில் புகுந்து கொண்டவர்கள் அல்ல-செய்த தியாகங்கள், நாட்டுமக்கள் வைத்த நம்பிக்கை, காங்கிரசை ஆட்சி பீடத்திற்கு அனுப்பியது. சமதர்ம வீரர், சண்டமாருததீரர்தான் ஆட்சி பீடத்தில் முதல்வராக அமர்த்தப் பட்டார்!

"சோஷியலிச மாதிரியில்" ஒரு அரசாங்கத்தை அமைக்கப் போவதாகக் கூறினார்கள். "குதிரை மாதிரி" இருக்கும் மிருகம் கூட குட்டியாயிருக்கும் பொழுது பார்ப்பதற்கு கொஞ்சம் நன்றாக இருக்கும்! அதைப்போல "சோஷியலிச மாதிரியில்" கூட ஆரம்பத்தில் அதனுடைய அவலட்சனங்கள் தெரியவில்லை! ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு வகையில் சமதர்ம முறை கிடைத்திருப்பதுபோல, நமது நாட்டுக்கும் ஒரு வகையான சமதர்மம் கிடைத்திருக்கிறது எனச்சிலர் நினைத்துச் சமாதான மடைந்தார்கள்!

குதிரை மாதிரி இருக்கும் மிருகத்தின் உண்மையான சொருபம் அதன் குரலால் வெளிப்படுவதுபோல, "சோஷியலிச மாதிரி" காங்கிரசின் உண்மையான தன்மை அதனுடைய குரலால் வெளிப்பட்டு

(11-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 26—5—57 சென்னை

ஏட்டுச் சுரை!

"ஏட்டுச் சுரைக் கறிக்குதவாது" என்று ஒரு பழமொழி உண்டு. ஏட்டில் சுரைக்காயைப்போலப் படம் போட்டு வைத்துக்கொண்டால், அதை வைத்துக் கறி செய்து சாப்பிட்டுவிட முடியாது. ஏட்டில் எழுதப்பட்ட காயோ கனியோ பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் பசி தீர்க்கப் பயன்படாததுபோல, இந்திய அரசாங்கத்தினர் தமது ஏட்டில் ஏராளமான உணவு உற்பத்தியைக் குவித்துக் காட்டுகிறார்கள். ஏட்டில் "குவித்துக் காட்டப்படும்" உணவு நாட்டு மக்களின் பசியை எந்த அளவுக்குத் தீர்க்குமென்று தெரியவில்லை.

இந்தியாவின் உணவு உற்பத்தி ஆண்டுதோறும் பெருகி வருவதாக இந்திய அரசாங்கத்தின் உணவு—விவசாய மந்திரி அசித் பிரசாத் செயின் அவர்கள் மக்கள் சபையில் கூறியுள்ளார். அவருடைய கூற்றுப்படி 1952-லிருந்ததைவிட 1957-ல் இந்தியாவின் உணவு உற்பத்தி 6 கோடி டன் அளவு அதிகரித்திருக்கவேண்டும். அரசாங்கத்தின் கணக்கை வைத்துப்பார்த்தால், பற்றாக்குறைக்கோ பஞ்சத்துக்கோ இடமில்லை, விலைகள் குறைந்திருக்கவேண்டும்.

மந்திரி செயின் சொன்னதை மிஞ்சுமளவுக்கு, மற்றொரு மந்திரியான பஞ்சாப்ராவ் தேசமுக் என்பவர் "இந்தியாவின் உணவு உற்பத்தி இதற்குமுன் கேட்டிராத அளவில், எண்ணிப் பார்க்க முடியாதபடி, பிரமிக்கத்தக்க வகையில் உயர்ந்திருக்கிறது!" என்று மிகுந்த பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

"கேட்டிராத அளவில், எண்ணிப்பார்க்க முடியாதபடி, பிரமிக்கத்தக்க அளவில்" உணவு உற்பத்தி ஆகிவிட்டதை நாடாளும் மந்திரிகள் சொல்லும்பொழுது, ஒரு கனம் கண்ணை மூடிக்கொண்டாவது கேட்டு, மனதிலே தோன்றும் சுபிட்ச நிலைமையைக் கண்டு களிப்பெய்தலாம் என்று பேதை மனதுக்கு தோன்றுகிறது. ஆனால் கண்ணைத் திறந்து பார்த்தால், பாழுங்கண்களுக்கு நாட்டில் நிலவும் பஞ்சமும் பட்டினியும், இல்லாமை போதாமை குறைகளும்தான் தெரிகின்றன. கண்ணை மூடிக்கொண்டால்கூட, உணவு போதவில்லை என்ற கூக்குரல் நாட்டின் நாலாபக்கங்களிலிருந்து வருவது காதில் விழுகின்றது.

உணவு உற்பத்தி பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறிவிட்டதாக மந்திரிகள் கூறுகிறார்கள். ஆனால் நாட்டிலுள்ள நிலைமை அவர்களுடைய கூற்றை மெய்ப்பிப்பதாக இல்லை. உணவின்விலை அதிகமாகிக்கொண்டே போகிறது, அதே சமயம் கிடைக்கும் உணவுப் பண்டங்களின் அளவு குறைந்துகொண்டே வருகிறது.

உணவு உற்பத்தி திருப்திகரமாக, "பிரமிக்கத்தக்க" அளவில் முன்னேறிவிட்டதாக அறிவிக்கும் அதே மத்திய அரசாங்கம், மற்றொரு அறிக்கையில் "இந்தியாவிலுள்ள பதினான்கு மாநிலங்களில் எட்டு மாநிலங்களிலுள்ள பயிர்கள் படுசேதமடைந்துவிட்டன" என்று அறிவிக்கிறது. "எட்டு மாநிலங்களில் பயிர்கள் நாசமாகி, இந்தியாவின் மொத்த உற்பத்திமட்டும் உயர்ந்திருப்பதாக எப்படிச் சொல்கிறீர்கள்?" என ஒரு மக்கள்சபை அங்கத்தினர் கேட்டிருக்கிறார். அதற்கு "மாநில அரசாங்கங்கள் தந்த விவரங்களை வைத்துக்கொண்டு நாங்கள் கூறுகிறோம்" என உணவு மந்திரி, அறிக்கையில் உள்ள குறைப்பாட்டை மாநில அரசுகளின்மீது போட்டுவிட்டார். எட்டு மாநிலங்களில் பயிர்கள் நாசமாயிருக்க உணவு நிலைமை முன்னேறிவிட்டதாக எப்படிக் கூறமுடியும் என்பதைப் பிறர் சொல்வதற்குமுன் அந்த மந்திரி உணர்ந்ததாகத் தெரியவில்லை.

"பிரமிக்கத்தக்க அளவில்" உணவு நிலைமை சீரடைந்துவிட்டதாக மத்திய மந்திரி சொன்னபோதிலும், மாநிலங்களிலிருந்து வரும் செய்திகள் பரிதாபப்படத்தக்க விதமாய் இருக்கின்றன.

மேற்கு வங்காளத்தில் பஞ்சப் பிரதேசங்கள் தோன்றிவிட்டன. ஏழு லட்சம் குடியானவர்கள் பஞ்சக் கொடுமையால் பாதிக்கப்பட்டிருப்பதாக நேரில் கண்டவர்கள் அறிவிக்கிறார்கள். "நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது, இருந்தாலும் சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது!" என மேற்கு வங்காள உணவு மந்திரி பி. சி. சென் கூறியுள்ளார். நிலைமை மோசமாவதை காங்கிரசு மந்திரியே ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மத்திய இந்தியாவில் பட்டினிச்சாவுகள் ஏற்படுவதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

மைசூர் மாநிலத்தை எடுத்துக்கொண்டால், "பீசாப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு தாலுக்காக்களில் பஞ்சம் பரவியுள்ளது. சுமார் ஏழுலட்சம் மக்கள் பட்டினியின் கோரப் பிடியில் சிக்கியுள்ளனர்" என, எதிர்க்கட்சியினரோ வேண்டாத பத்திரிக்கைச் செய்திகளோ அல்ல, மைசூர் உணவு மந்திரியாக இருக்கும் எச். எசு. உருத்திரப்பா அவர்கள் அறிக்கை விடுகிறார்.

ஆந்திர மாநிலத்தில் உணவுப் பண்டங்களின். விலைகள் ஏறியபடி இருக்கின்றன. கடந்த ஒரு வாரத்திற்குள், நெல்விலை மூட்டைக்கு 8 ரூபாய்க்குமேல் உயர்ந்திருப்பதாகத் தெரிகிறது. மேற்கு வங்காளத்திற்கும் சௌராட்டிரத்துக்கும் அனுப்ப நெல் வாங்கப்படுகிறதேயன்றி, உள்நாட்டில் விற்பனைக்காக நெல் அதிகமாகக் கிடைக்கவில்லையெனக் கூறப்படுகிறது.

கேரளத்தில் உணவு நெருக்கடி தோன்றியுள்ளதாகவும், உடனடியாக பற்றாக்குறை நீக்கப்பட்டு, நிலைமையைச் சமாளிக்க, கேரள உணவுமந்திரி டில்லிக்குச் சென்று திரும்பியுள்ளார். இந்தியாவின் உணவு நிலைமை ஆண்டுதோறும் முன்னேறிவருவதாக மத்திய அரசாங்கம் புள்ளிவிவரங்களைத் தருகிறது. ஆனால் கேரள மாநிலத்தின் புள்ளி விவரங்களைப் பார்த்தால், 1948-லிருந்ததைவிட 1955ல் சராசரி உணவு குறைந்திருக்கிறது, 1955ல் இருந்ததைவிட 1956-57ல் இன்னும் குறைந்துபோகிறது.

தமிழ்நாட்டைப் பார்த்தால், எந்த அளவு உணவு நிலைமை மோசமாகி வருகிறது என்பது இங்குள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரிசியின் விலையேற்றங்கள் குறையவில்லை, வரிவிதிப்புக்குப்பின் மேலும் ஏறிவிடுமோ என்று அஞ்சத்தக்க நிலைமை இருக்கிறது. முன்பிருந்ததைவிடப் பற்றாக்குறை மாவட்டங்கள் அதிகமாகவும் நல்ல அரிசி கிடைப்பது அரிதாகவும், அரிசிக்கடைகளில் பழையபடி நீண்ட வரிசைகள் தோன்றவும் ஆரம்பித்துவிட்டன.

தென்னாட்டில் பற்றாக்குறை பகுதிகள் இருந்தாலும், இங்கிருந்து மேற்கு வங்காளத்துக்கும் சௌராட்டிரத்துக்கும் நெல் போகிறது. அங்கிருந்து கள்ளக்கடத்தலின் மூலம் அந்த நெல் பாகிச்தானம் சென்றுவிடுகிறதாம்.

இவ்வாறாக ஒருபுறம் விலையேறும் என்பதை எதிர்பார்த்து உணவு தானியங்கள் பதுக்கப்படுகின்றன. மறுபுறம் விலைக்கு வருகிற தானியங்கள் வாங்கப்பட்டு கள்ளத்தனமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. நடுவில் ஏழைகள், அனாதைகளாக விடப்படுகின்றனர்.

மக்களுக்கு உணவளிப்பது அரசாங்கத்தின் பொறுப்புகளில் ஒன்று. இன்றுள்ள நிலையில், உணவு தானியங்கள் அதிகமாக விலைக்குக்கிடைக்கவும், விலைவாசிகள் குறையவும் அரசாங்கம் தலையிட்டு காரியமாற்றவேண்டும். உணவுப் பொருள்கள் அதிக அளவில், ஏட்டிலே அல்ல, நாட்டில் உற்பத்தியாக அரசாங்கம் வழிவகைகள் செய்ய வேண்டும். உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தியானால் மட்டும் போதாது. உற்பத்தியான உணவுப் பொருள்களை வாங்கும் திறன் மக்களுக்குத் தரப்பட்டிருக்கவேண்டும்!

வினா: பொதுத்தேர்தலின்போது காஞ்சிபுரத்தில் சுவரொட்டிகளிலும், துண்டு அறிக்கைகளிலும், அபேட்சகர் விண்ணப்பத்தாளிலும் திரு அண்ணாதுரை அவர்கள் 'சி. என் அண்ணாதுரை முதலியார்' என்று போட்டுக்கொண்டு ஓட்டுக்கேட்டதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா?

விளக்கம்: மாற்றுக் கட்சிகளிலுள்ள இழிதன்மை பூண்டோர் எப்படிப்பட்ட தாழ்வான பிரசாரத்தில் இறங்குவார்கள் என்பதற்கு வினாவில் குறிக்கப்படும் செய்தி நல்ல எடுத்துக்காட்டாகும்.

தீயநாற்றம் வீசும் சேற்றை அள்ளி பிறர் மீது வீசி, மற்றவர்களை மாசு படுத்த முயலும் கயவர்கள், அந்தச் சேற்றில் இறங்கும்போது தங்கள் கால்களிலும், அந்தச் சேற்றை எடுக்கும்போது தங்கள் கைகளிலும் அப்பிக்கொள்கிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். பிறரை வீணாக மாசுபடுத்துவோர் தங்களைத் தாங்களே தாம் மாசுபடுத்திக் கொள்கிறார்கள் என்பது, உண்மைநிலை புலப்படும்போது உலகுக்கு விளங்கும் என்பது திண்ணம்.

பொதுத்தேர்தலின்" போது சுவரொட்டிகளிலோ, துண்டு அறிக்கைகளிலோ, பிரசாரத்திலோ அறிஞர் அண்ணா அவர்களின் பெயர் சி. என். அண்ணாதுரை என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்ததேயல்லாமல் சி. என். அண்ணாதுரை முதலியார் என்று அவற்றில் எதிலும், எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அபேட்சகர் விண்ணப்பத்தாளில் 'சி. என். அண்ணாதுரை முதலியார்' என்றுமேலே பெயர் போடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் அறிஞர் அண்ணா அவர்கள் அல்ல, இன்றைய அரசாங்கமே முழுக்க முழுக்கக் காரணம் ஆகும். வாக்காளர் பட்டியல் தயாரித்த அரசாங்கம் எவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொண்டது என்பதற்கு இது நல்லதொரு எடுத்துக்காட்டாகும். வாக்காளர் பட்டியலைத் தயாரித்த அரசாங்க அலுவலாளர் அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டறியாமலும், அவர்களுக்குத் தெரியப்படுத்தி விளக்கம் பெறாமலும், உண்மையறிந்துகொள்ள முயலாமலும் தான்தோன்றித்தனமாகத் தம் விருப்பம்போல் அண்ணாவை 'அண்ணாதுரை முதலியார்' என்று குறிப்பிட்டு, அச்சியற்றிவிட்டிருக்கிறார். வாக்காளர் பட்டியலில் எப்படிப் பெயர் அமைந்திருக்கிறதோ அப்படியேதான் அதனை அபேட்சகர் விண்ணப்பத்தாளிலும் போடவேண்டும் என்று தேர்தல் சட்டம் கூறுகிறது. அபேட்சகர் விண்ணப்பத்தாளைத் தாக்கல் செய்ய எண்ணிய அன்றுதான், அண்ணா அவர்கள், தம்முடைய பெயர் வேண்டுமென்றே மாசு கற்பிக்கும் நோக்கத்துடன் யாரோ ஒரு அரசாங்க அலுவலாளரால் திரித்துக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைக் தெரிந்து கொள்ள நேர்ந்தது. பிறகு தம் பெயரை முறைப்படி திருத்தி, பட்டியலில் வெளிவரச் செய்யப்போதுமான நேரம் இல்லாத காரணத்தால், வாக்காளர் பட்டியலில் உள்ளபடி விண்ணப்பத்தாளிலும் தம் பெயரைப் போடவேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. அரசியலார் செய்கிற தவறுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் எப்படிப் பொறுப்பாளி ஆவார்கள்.

முன்கூட்டியே வாக்காளர் பட்டியலைப் பார்த்துத் தம் பெயரை முறைப்படி அண்ணா அவர்கள் மாற்றியிருக்கலாமே என்று கேட்கக்கூடும். இப்படிப்பட்ட தவறு வேண்டுமென்றே செய்யப்படும் என்று அண்ணா அவர்கள் முன்கூட்டியே எதிர்பார்க்கவில்லை. பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா என்று பிறர் மூலம் அறிந்துகொண்டார்களேயல்லாமல், பெயர் எப்படிக் குறிக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ள முயலவில்லை. காரணம் அது பற்றிய ஐயம் ஏற்படாததேயாகும்.

சட்டமன்றத்தில் பேசப்படும்போதும், எழுதப்படும்போதும் தம் பெயர் சி. என். அண்ணாதுரை என்றே குறிப்பிடப்பட வேண்டும் என்று சட்டமன்றச் செயலாளருக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்துக்கொண்டார்கள். அவரும் அதனை ஏற்றுக்கொண்டு அவ்வாறே குறிப்பிடுவதாகக் கூறினார். பட்டியலில் உள்ள தவறைதிருத்தி விடுவதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

வாக்காளர்ப் பட்டியல் தயாரிக்கும் தம் அரசாங்கத்தின் போக்கு இப்படித் தாறுமாறாகவும், தவறாகவும் இருப்பதை உணர்ந்துகொள்ள மாட்டாத அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும்போது 'முதலியார்' என்ற சாதியைக்குறிக்கும் சொல்லை அண்ணா அவர்களே விரும்பி ஏற்றுக்கொண்டு தம் பெயரோடு சேர்த்துக் கொண்டிருப்பது போல் பொருள்படும்படியாகப் பேசித் தம் அறித தன்மையைக் காட்டிக்கொண்டிருக்கிறார்.

வசைகளால் பிறரைக் குத்திக்கொண்டு இருப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள சில திராவிடக் கழகத்தினர், தம் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களை மறந்துவிட்டு, அறிஞர் அண்ணா அவர்களைத் தூற்றுவதிலே மிகத் தீவிரமாக இறங்கியுள்ளனர். பெரியார் அவர்கள் திருமணம் செய்துகொண்டபோது, ஆவணப்பதிவாளர் அலுவலகத்தில் (ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ்) பெரியார் அவர்களால் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தாளிலும், அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருந்த திருமணம் பற்றிய அறிக்கையிலும், அவர், தம்மை "இந்து பகுத்தறிவுவாதி" என்றும், "ஈரோடு வெங்கடப்ப நாயக்கர் மகன் ராமசாமி நாயக்கர்" என்றும் தான் குறிப்பிட்டிருந்தார். பெரியார் அவர்கள் சொத்துக்கள் சம்பந்தமான பல்வேறு பத்திரங்களிலும் 'ஈ. வெ. ராமசாமி நாயக்கர்' என்றுதான் இன்றும் கையெழுத்துப்போட்டுத் தீரவேண்டியவராக இருக்கிறார்கள். கெசட் மூலம் தம் பெயரை முறைப்படி திருத்திக் கொள்ளவேண்டிய நிலைமையை உண்டாக்கிக்கொள்ளாமல் தான், பெரியார் அவர்கள் இருந்துவருகிறார்கள். இந்தச் சட்டப்படியான நிலைமையை அடிப்படையாக வைத்துக்கொண்டு, பெரியார் அவர்கள் 'சாதிப்பற்று' கொண்டவர் என்று இழித்துக் கூற நாம் முன்வருவதில்லை. ஆனால் அண்ணா அவர்களால் ஏற்படாமல், அரசாங்கத்தின் தவற்றால் ஏற்பட்ட நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு தூற்றித்திரிய குத்தும் குணாளர்கள், வெட்கத்தை மறந்து ஓடோடியும் வருகிறார்கள். கண்ணாடி வீட்டிலிருப்பவர்கள் கல்வீட்டின்மீது கல்லை எடுத்து வீசுவதைப்போல், பிறரைக் குத்திக்கொண்டேயிருக்கும் பண்பினர் தி. மு. கழகத்தைத் தூற்றுகின்றனர். கல்வீட்டிலிருப்பவர்கள் அந்தக் கல்லையே எடுத்துத் திரும்பக் கண்ணாடி வீட்டின்மீது வீசினால், கண்ணாடி வீடு என்னவாகும் என்பதை உணராதவர்போல் குத்தும் பண்பினர் இருந்துவருவது இரங்கத்தக்கதாகும்.

அறிஞர் அண்ணா அவர்களுக்குப் போடப்பட்ட வாக்குகள் அனைத்தும் அண்ணா அவர்களின் அறிவையும், ஆற்றலையும், நேர்மையையும், நாணயத்தையும், பண்பையும், படிப்பையும், கொள்கையையும், குறிக்கோளையும், அருமையையும், பெருமையையும் அறிந்து போடப்பட்டவைகளே ஒழிய, அவருடைய 'சாதி' கண்டு போடப்பட்டவை அல்ல என்பதை வினா எழுப்பியோர் உணருவார்களாக!

அரைக்க அரைக்க சந்தனம் மணங்கமழும்; சுடச்சுட செம்பொன் ஒளி வீசும்; காய்ச்ச காய்ச்ச பால் இனிக்கும்; அவைபோல் இழித்துக் கூறப்படக் கூறப்பட அண்ணாவின் புகழ் ஓங்கும்!

—இரா. நெ.

ஆந்திர கேசரி

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டவரும், ஆந்திர மாநிலம் அமைவதற்கு முதற் காரணமாய் இருந்தவருமான திரு. டி. பிரகாசம் அவர்கள் 20ந்தேதி இரவு உயிர் நீத்தார் என்ற செய்தி இந்திய அரசியல் உலகில் ஈடுபட்டோர் எவரையும் சோகத்திலாழ்த்துவதாகும். கடந்த 36 ஆண்டுகளாகத் தன்னலங் கருதாது, அரசியலில் அவர் நாட்டுக்கு நல்ல தொண்டாற்றினார். தாம் கொண்ட கொள்கைகளை உறுதிப்பாட்டுடன் கடைப்பிடித்ததுடன், அதனால் அவ்வப்பொழுது ஏற்பட்ட நலிவுகளையும் தாங்கிக்கொண்டார். அண்ணல் காந்தியின் தலைமையில் காங்கிரசு துவக்கிய போராட்டங்களில் எல்லாம் திரு. பிரகாசம் அவர்கள் முழுமனதுடன் ஈடுபட்டு, தியாகத்துக்குத் தளராதசிந்தையுடன் பணிபுரிந்தார். பத்திரிக்கை ஆசிரியர் என்ற முறையில், கட்சியின் கோட்பாடுகளைச் சொந்த நலனையும் பாராது பரப்பினார். தென்னாட்டு அரசியல் உலகிலும், சிறப்பாக ஆந்திர நாட்டு அரசியலிலும், தன்னேரில்லாச் சிங்கமெனத் திகழ்ந்த திரு பிரகாசம் மறைந்தது, தென்னாட்டு அரசியலுக்கு ஒரு பேரிழப்பாகும். ஆந்திர கேசரியின் முழக்கம் நின்று விட்டது, அரசியல் உலகில் ஒரு பிரகாசம் மங்கிவிட்டது!

திரு. பிரகாசம் அவர்களைப் பிரிந்து சோகத்தில் ஆழ்ந்துகிடக்கும் அவரது குடும்பத்தினர்க்கும், நண்பர்களுக்கும் நமது ஆறுதல்கள் உரித்தாகுக!

ஓவியக்கலை

[2-5-57 வியாழனன்று மாலை சென்னை இரவி வர்மா கலைக்கழகத்தின் ஆதரவில், தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இரவிவர்மா நூற்றைம்பதாவது பிறந்தநாள் ஆண்டுவிழாவில் இரா. நெடுஞ் செழியன் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு :]

தென்னகத்தில் ஈடும் எடுப்பும் அற்ற ஒருபெரும் ஓவிய வல்லுநராய் வாழ்ந்து, உயிரோவியங்கள் பலவற்றையும் தீட்டி அழியாப் புகழையும், பெருமையையும் என்றென்றும்நிலைநாட்டிக்கொண்ட இராசா இரவிவர்மா அவர்களின் நூற்றைம்பதாவது பிறந்தநாள் விழாவையும், அதனை ஒட்டி அழகிய ஓவியக் கண்காட்சி ஒன்றையும் மிகச் சிறப்பாக நடத்த முன்வந்த இரவிவர்மா கலைக்கழகத்தினரின் முயற்சி, பெரிதும் போற்றிப் பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

இராசா இரவிவர்மாவின் ஓவியப் பரம்பரையிலே வந்தவர்களில், தலைசிறந்தவராய் விளங்கும் தோழர் வைத்திய நாதன் அவர்கள் பெருமுயற்சி எடுத்து இரவி வர்மாவின் சில உயிரோவியப் படங்களையும், அவற்றை ஒத்த மேலைநாட்டுக்கீழைநாட்டுப் படங்களையும், தாமும் தம்மைச் சேர்ந்தவர்கள் எழுதிய படங்களையும், இரவிவர்மா வளர்த்த கலைக்கு முற்றிலும் முரண்பட்டு மிகத் தாழ்ந்தனவாய் விளங்கும் படங்களையும் கண்காட்சியில் அழகுற வைத்துள்ளார்கள். ஓவியக்கலையின்மீது கொண்டிருக்கும் ஆர்வத்தின் காரணமாகவும், இரவிவர்மா வளர்த்த ஓவியக்கலையை மேலும்மேலும் விரிவாகவும், பரவலாகவும் வளர்க்கவேண்டும் என்பதிலே கொண்ட எழுச்சியின் காரணமாகவும் அவர் சென்ற பல ஆண்டுகளாகவே இத்தகைய ஓவியக் கண்காட்சிகளை அரும்பாடுபட்டு நடத்திவருகிறார். கண்காட்சியைக்காணும் வாய்ப்பும், உங்களிடையே நின்று பேசும் வாய்ப்பும் ஏற்பட்டமை குறித்து மிக்க மகிழ்ச்சியுறுகிறேன்.

இரவிவர்மா ஓவியங்களின் உயர்வையும், சிறப்பையும், அழகையும், கவர்ச்சியையும், நேர்த்தியையும், உயிரோட்டத்தையும் அறியாத நல்லறிவு படைத்தவர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் இருக்கமாட்டார்கள். அவரது அழியா உயிரோவியங்கள் உலகப்புகழ் பெற்றவை. அவரது படங்கள் இடம்பெருத வண்ண ஓவியச்சாலை எதுவும் இல்லை. எல்லா நாட்டு ஓவியச்சாலைகளிலும் அவர் வரைந்த படத்தை வைத்து மகிழ்வதிலே பலரும் பெருமை கொள்கின்றனர். மேலை நாடுகளிலே சிறந்து விளங்கி, இன்று உலகப் புகழ் பெற்றுத் திகழும் மைக்கேல் ஆஞ்செலோ, லியனர்டோ-ட-வின்சி, ராபெல், ரூபான்சு, ரெய்னல்சு போன்றவர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படத்தக்க சிறந்த ஒருவராக இராசா இரவிவர்மா காட்சியளித்துவருகிறார்.

உண்மைக்கு முரண்படாத கற்பனையைக் கலந்து உள்ளதை உள்ளவாறு எடுத்துக் காட்டும் உயிரோவியங்களை வரைவது திராவிடக்கலையின் சிறப்பாகும். இந்தச் சிறப்பு நாகரிகம் பரவிய எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நல்லறிவு படைத்த மக்களாலும் போற்றி வளர்க்கப்பட்டு வருவதாகும். இத்தகைய சிறப்புக் கொண்ட ஓவியப் படங்களைத்தான் மிகச் சிறந்த படங்களென அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா, சீன போன்ற நாடுகள் போற்றிக் கொண்டாடுகின்றன. உண்மைக்கு முரண்பட்ட கற்பனைப் படங்களை அந்த நாகரிக நாடுகளெல்லாம் மிகச் சிறந்த படங்களென்று போற்றுவதில்லை. உள்ளதை உள்ளபடியே எடுத்தியம்பும் உயிரோவியப்படங்களைத்தான் அந்நாடுகள் ஓவியச்சாலைகளில் வைத்து அழகு பார்க்கின்றன. இரவிவர்மாவின் கலைத்திறன் தொன்றுதொட்டுப் போற்றப்பட்டுவரும் திராவிட ஓவியக்கலையின் முழுச்சாயல் படிந்ததாய், உலகோரால் போற்றக்கூடியதாய் அமைந்ததாகும். இராசா இரவிவர்மா மேலைநாட்டு ஓவியங்களை அப்படியே முழுக்க முழுக்கத் தழுவித்தான் தமது படங்களை வரைந்தார் என்றும், தமக்கென்றே இந்த நாட்டிற்கென்றே அமைந்த தனி ஆற்றலை அவர் காண்பிக்கவில்லை என்றும் சிலர் பொருமையால் உளறிக் கொட்டிவருகின்றனர். இரவிவர்மா வண்ணஞ் சேர்ப்பு முறையைத்தான் மேலைநாட்டு ஓவியவல்லுநர்களிடம்மிகநல்ல முறையில் கற்றுக்கொண்டாரே ஒழிய, ஓவியம் வரையும் கலையை அவர்களிடம் கற்றுக் கொள்ளவில்லை. திராவிட ஓவியக்கலையின் முழுச்சாயல் படிந்து விளங்கும் சித்தன்னவாசல், அசந்தா ,எல்லோரா, குகைகளிலுள்ள படங்களையும், தஞ்சைக் கோயிலிலுள்ள படங்களையும் அடிப்படையாகக் கொண்டுதான் இரவிவர்மா தம் கலைச்செல்வத்தைப் படைத்துள்ளார்.

இரவிவர்மா மட்டுமல்லாமல் அவரது குடும்பத்தினர் அனைவருமே சிறந்த ஓவிய வல்லுநர்களாகத் திகழ்ந்து வந்துள்ளனர்.

இப்பொழுது அளவிலும், தோற்றத்திலும் உண்மைக்கு மாறுபட்ட கற்பனை ஓவியங்களை வரைந்து, அவற்றைச் சிறந்தனவாகக் கொண்டாடும் பழக்கம் வங்காள ஓவியர்களிடையே ஏற்பட்டுள்ளது. அந்த ஓவியங்களுக்கு வடநாட்டாரும், வடநாட்டாருக்கு அடிமைபோன தென்னட்டாரும், இந்திய அரசியலாரும் எல்லாவகையிலும் ஆதரவு கொடுத்து அவற்றை வளர்க்கவும் பரப்பவும் முயலுவதோடு, இரவிவர்மாவின் படங்களை இழித்துப் பழித்துப்பேசி புறக்கணிக்கவும் தலைப்பட்டுள்ளனர்.

இரவிவர்மாவின் படங்கள் மேலை நாட்டுப் படங்களைப் போல் அமைந்திருக்கின்றன என்றும், ஆனல் வங்காள ஓவியங்கள் தனித்தன்மை கொண்டிருக்கின்றன என்றும் கூறி அவர்கள் பெருமையடித்துக் கொள்கின்றனர். ‘ அறிஞர்கள் எங்கிருந்தாலும் ஒன்றுபோல் நினைப்பார்கள் ’ என்ற பழமொழிக்கிணங்க உலக ஓவிய வல்லுநர்களிடையே சில பொதுப்படையான பண்பு காணப்படுவது இயற்கையே ஒழிய இழித்துக் கூறத்தக்கதல்ல. ஓவியம் வரையத் தெரியாத சிறுவன் கிறுக்கி வைப்பதைப்போன்ற ஓவியங்களை வரைந்து வைத்துக் கொண்டும், உண்மைக்குப் பொருந்திவராத அளவுக்கு மீறிய உறுப்புகளோடு கூடிய உருவப்படங்களை வரைந்து வைத்துக்கொண்டும் அவைதாம் இந்திய ஓவியங்கள் என்றும் வங்காள ஓவியர்கள் செப்பிவிடுகின்றனர். ரவீந்தரநாத தாகூர் சிறந்த கவிஞராவார்; அவரேசிறந்த ஓவியராக இருந்து தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை; உள்ளபடியேயும் அப்படியில்லை. அவர் எழுதிய கவிதைகளைப் போற்றுகிறோம் என்பதற்காக அவர் கிறுக்கித்தள்ளிய ஓவியங்களையும் போற்றவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அவர் சிறந்த கவிஞரே ஒழிய சிறந்த ஓவிய வல்லுநரல்லர். ஆனல் வங்காளிகளும், பிறவடநாட்டு ஓவியர்களும் அவர் கிறுக்கித்தள்ளிய ஓவியங்களை வைத்துக்கொண்டு, தாமும் அப்படியே கிறுக்கித் தள்ளுகின்றனர். அந்த ஓவியங்கள் எப்படியிருக்கின்றன என்ருல், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மகொஞ்சொதாரோ, அரப்பா ஓவியங்களைக் காட்டிலும் தரக்குறைவாகவே காணப்படுகின்றன. கிறுக்கி வைப்பதெல்லாம் ஓவியங்கள் என்ருல், குறைபாடுகளுக்குக் கற்பனை-புதுமை-இந்தியதேசியம் என்ற கவசங்கள் பூட்டப்பட்டு உலாவவிடப்படுகின்றன என்றுதான் பொருள்படும். உள்ளதை உள்ளவாறு வரைந்து காட்டுவதில்தான் திறமையிருக்கிறதேயல்லாமல் கண்டபடி கிறுக்கித் தள்ளிவிட்டு, அதுதான் சிறந்த கற்பனை ஓவியம் என்பதிலே என்ன திறமையிருக்க முடியும்

உள்ளத்தை உள்ளபடியே எடுத்துக்காட்டத்தான் நிழற்படம் (போட்டோ) இருக்கிறதே, அதைவிட வரையும் ஓவியத்தை எப்படிச் சிறந்ததாகக் கொள்ளமுடியும் என்று சிலர் கேட்கின்றனர். நிழற்படம் உள்ளதை அப்படியே எடுத்துக் காட்டும். நாம் விரும்பியதைச் சேர்த்துக்காட்டவோ, நாம் விரும்பாததைக் குறைத்துக் காட்டவோ, அதற்குத் தெரியாது. ஆனல் ஓவியன் ஒருவன் வரைந்து காட்டும் ஓவியத்தில் உண்மைநிலை குலையாமல் எதை எதைக் காட்சிக்குள் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்று அவன் எண்ணுகிருனே அவற்றையெல்லாம் கொண்டுவந்து காட்டிவிடமுடியும். நிழற்படக்காரன் இருக்கும் உலகை அப்படியே காட்டுவான், ஆனல் ஓவியன் இருக்கும் உலகத்தை மட்டுமல்லாமல் தேவையான உலகத்தையும், அவன் விரும்பும் உலகத்தையும் புதிதாக உருவாக்கி உள்ளது உள்ளவாறு போல்தீட்டிக்காட்டுவான். காட்சியில் காணப்படாததை காட்சிக்குள் கொண்டுவந்து உண்மைபோல் காட்டும் திறம் ஓவியத்தினிடத்தில் அமைந்திருக்கிற காரணத்தால் தான் அது நிழற்படத்தைவிட அந் வகையில் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

பண்டைத் தமிழகத்தில் ஓவியக்கலை மிகச் சிறந்த முறையில் போற்றப்பட்டு வந்திருக்கிறது. கோடுகளால் படம் வரைந்து காட்டும் பழக்கம் பண்டைத் தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறது என

(12-ம் பக்கம் பார்க்க)



பெரியசாமிக்கு ஆச்சரியமாக இருந்தது. பொன்னி தனக்காக வந்து காத்துக் கொண்டிருப்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

“பொன்னி! நான் வருவது உனக்கு எப்படித் தெரியும்? மாமா சௌக்கியமாக இருக்கிறார்களா?”

பொன்னி பதில் பேசவில்லை. அவள் கண்களில் நீர் மல்கி வழிந்தது. கலவரப்பட்ட முகத்தோடு காணப்பட்டாள். அவளது நிலையைக்காண பெரியசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் அருகில் நின்றுகொண்டிருந்த பெரியவர் யாரென்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

“பொன்னி! என்னை மன்னித்துவிடு! நான் பழய பெரியசாமி அல்ல. நான் இப்பொழுது புதிய மனிதனாகிவிட்டேன்!”

இன்னும் ஏதேதோ கூற எண்ணினான். ஆனால் நிறுத்திக்கொண்டு அந்தப் பெரியவர் யார் என்பதை அறிந்து கொள்ள ஆவல் கொண்டான்.

“பொன்னி பெரியவர் யார் என்று தெரியவில்லையே.”

“அத்தான் என்னை நீங்கள் உயிருடன் காண்கிறீர்கள் என்றால் அது இவர் செய்த உதவியினால்தான்”

பொன்னியின் உயிருக்கு ஆபத்து என்பதை யறிந்ததும் பெரியசாமி மனம் பதறினான். தன் தங்கத்தை மீட்டுத் தந்த அந்தப் பெரியவர் குலக் குரு என்றே எண்ணிக் கொண்டான்.

பெரியசாமி மரியாதையுடன் அவரை வணங்கினான். அவரும் பதிலுக்கு வணங்கிவிட்டு பேசமுடியாது நின்றுகொண்டிருந்த பொன்னிக்குப் பதிலாகப் பேச முனைந்தார்.

“தம்பி! பொன்னம்மாவுக்கு உன் நினைவுதான். அடிக்கடி உன்னைப் பற்றிப்பேசும். நீ இன்று விடுதலையாகி வருவாய் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. உன்னுடைய மாமா தர்மலிங்கம் இன்று மதுரையிலிருந்து வருவதாக எழுதியிருந்தார். இதுவரை மூன்று பஸ்கள் போய்விட்டன. ஆனால் அவர் வரவில்லை. பொன்னம்மாவுக்கு ஆறுதலாக நீயாவது வந்தாய். பொன்னம்மா! திண்டுக்கல் போகும் பஸ் ஒன்று இன்னும் சிறிது நேரத்தில் வரும். அதையும் பார்த்து விடுவோம்” என்றார் பெரியவர்.

பொன்னியும் தலையசைத்தாள்.

தர்மலிங்கம் வருகிறார் என்றதும் பெரியசாமிக்கு ஒரு பயம் ஏற்பட்டது. அன்று கண்டபடி ஏசிக்கொண்டிருந்த அவர், கொலைகாரன் என்ற பட்டத்தோடு சிறை சென்று வந்த தன்னை எப்படி மதிப்பார் என்பதை அவனால் யூகிக்க முடியவில்லை. அவரை நேரில் காண்பதற்கு முன் அவர் மனதை யறிந்து பின் அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

“பொன்னி உனக்கு என்ன நேரிட்டது. ஏன் இப்படி இளைத்துப்போயிருக்கிறாய்?”

“நீங்கள் கூடத்தான் மாறியிருக்கிறீர்கள்”

“ஆமாம் பொன்னி! உள்ளத்தினாலும் மாறிவிட்டேன். கடவுள் எங்கே என்று கேட்டு கேட்டலைந்த எனக்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டது. தூய்மையான வாழ்வை இனி நடத்துவேன். அதில் உன் பங்கும் உண்டு என்பதை மறந்துவிடாதே பொன்னி!”

பொன்னி ஏதோ கூற முயற்சித்தாள். ஆனால் தயங்கியபடி நின்றுவிட்டாள்.

அவளால் பேசமுடியவில்லை. அவளேதோ மனக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாள் என்பதை மட்டுமுணர்ந்துகொண்டான்.

ஊரைப் பகைத்து தந்தையைக் கொலைசெய்து சிறை சென்ற தன்னைக் குறித்துதான் பொன்னி வருந்துகிறாளோ என்று எண்ணினான்.

இதற்குள் ஒரு பஸ் தூரத்தில் வந்துகொண்டிருப்பதை பெரியவர் சுட்டிக் காட்டினார்.

“பொன்னி! நான் வருகிறேன். சாயங்காலம் உன்னைப் பார்க்கிறேன்.” என்று கூறி பெரியசாமி போக முயற்சித்தான்.

“அத்தான்! இருங்கள். அப்பா வந்துவிடுவார். எல்லோரும் ஒன்றாகப் போவோம். உங்களுக்கு என் வீட்டில்தான் சாப்பாடு!”

“ஆமாம்! தம்பி, வா. உன்னிடம் சில விஷயங்கள் பேச வேண்டும்.” என்று பெரியவரும் அழைத்தார்.

“இல்லை! பொன்னி, நான் வருகிறேன். சாயங்காலம் கட்டாயம் அங்கே சந்திக்கிறேன்.”

பொன்னியால் வேறு ஒன்றும் வற்புறுத்திக் கூற முடியவில்லை. பெரியசாமி விடை பெற்றுக் கொண்டு கிராமத்தை நோக்கி வேகமாக நடந்தான்.

ஊரடங்கிவிட்டது. ஆனால் பெரியசாமியின் மனதிலே ஏற்பட்ட கொந்தளிப்பு அடங்கவில்லை. அமைதியின்றி தெருவில் தன் வீட்டின்முன் உலாவிக் கொண்டிருந்தான். மாலையில் பொன்னியை சந்திப்பதாகக் கூறிவந்தவன் மாலையிலிருந்து வீட்டைவிட்டே வெளியேறவில்லை. பொன்னியைப்பற்றி ஊராரிடையே உலவிய பேச்சுக்கள் அவனது இதயத்தைத் துளைத்தன. பொன்னி தன்னிடமிருந்து எல்லையில்லாத தூரம் விலகிச் சென்றுவிட்டதை உணர்ந்தான். காலையில் பேசிக்கொண்டிருந்தபோது பொன்னி எதையுங் கூறாது மறைத்துவிட்டதை எண்ணி எண்ணி ஆத்திரமடைந்தான். தர்மகர்த்தாவின் குடும்பம் மிகத் தாழ்நிலைக்கு போய்விட்டதைக் கண்டு வருந்தினான்.

ரயில் போகும் சத்தம் மணி இரண்டு என்பதைக் கூறிற்று, தாங்க இயலாத வேதனையுடன் உலவிக்கொண்டிருந்த பெரியசாமி அங்கிருந்த கயிற்றுக்கட்டிலில் சாய்ந்தான். அரைமணி நேரம் சென்றிருக்கும். இன்னும் அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. யாரோ வரும் காலடிச் சத்தங்கேட்டு படுத்தபடியே திரும்பினான். ஒரு சிறுவன் வந்து தன் வீட்டில் ஏறுவதைப்பார்த்தான்.

“யாரது?”

“சின்னானுங்க!”

“என்ன?”

“இந்தக் கடதாசியைக் கொடுக்கச் சொன்னாங்க”

“கொண்டுவா இப்படி! யார் கொடுத்தா?”

“கோயிலையா வீட்டு சின்னம்மாங்க!”

பெரியசாமியிடம் ஒரு கவரைக் கொடுத்துவிட்டு சின்னான் திரும்பினான்.

பொன்னி என்ன எழுதியிருப்பாள் என்பதைப்பற்றி யோசித்தான் பெரியசாமி. தன்னை கல்யாணம் செய்துகொள்ளச் சொல்லி ஏதாவது சாகசமாக எழுதியிருப்பாள் என்று எண்ணிக்கொண்டான். அவளிடமிருந்துவந்த கடிதத்தைத் தொடுவதே பாவம் என்று அதைக் கொளுத்திவிட நினைத்தான். ஆனால், ‘என்னதான் சமாதானம் சொல்லுகிறாள் என்று பார்ப்போம்” என்ற ஆவலும் அவனுள் எழுந்தது. வீட்டினுள் சென்று ஒரு அரிக்கன் விளக்கை ஏற்றிக் கொண்டு திண்ணையில் வந்து உட்கார்ந்து கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தான்.

அன்புள்ள அத்தான்!

என் வாழ்நாளில் இதுவே உங்களுக்கு நான் எழுதும் கடைசிக் கடிதமாக அமையலாம். முன்பு நான் எழுதும் ஒவ்வொரு கடிதத்தையும் முப்பது தடவை படித்தேன் நாற்பது தடவை படித்தேன் என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கூறுவீர்கள். இப்பொழுது நான் எழுதும் இக் கடிதத்தை ஒரே முறை முழுவதும் படித்து விட வேண்டுகிறேன். இதுவே கடைசி விருப்பம்.

அத்தான்! இந்தக் கடிதம் உங்கள் கையில் கிடைத்து நீங்கள் படித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் நான் நமது ஊரின் எல்லையைத்தாண்டி ப மைல் தூரத்துக்கு அப்பால் ரயிலில் சென்று கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நான் பிறந்த இடம், வளர்ந்த இடம், படித்த இடம், உங்கள் அன்பைப் பெற்ற இடம், உ

களுடன் இன்பமாகப் பேசிய இடம் எல்லாவற்றையும் நீங்கி தாங்க இயலாத இதயச் சுமையுடன் சென்று கொண்டிருக்கிறேன்.

இதுவரை எனக்குச் சிறிதளவு நம்பிக்கையிருந்தது. நீங்கள் வருவீர்கள் - எனது உண்மை நிலையை அறிந்து கொள்வீர்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் தாங்கள் மாலையில் சந்திக்கின்றேன் என்று கூறிச்சென்று வரவில்லை. நெடு நேரம் நான் தோட்டத்தில்-நாம் எப்பொழுதும் சந்திக்கும் அதே இடத்தில் ஆவலோடு உங்களுக்காகக் காத்திருந்தேன், நேரம் ஆக ஆக எனது நம்பிக்கை தளர்ந்தது. தங்களை வீட்டிற்கே அழைத்து வர ஆள் அனுப்பினேன். ஆனால் நீங்கள் மறுத்து விட்டீர்களாம். ஊரார் வெறுத்தாலும், பழி தூற்றினாலும் நீங்கள் என்னிடம் அன்பு காட்டுவீர்கள் என்று எண்ணியிருந்தேன். நீங்களும் என்னை வெறுக்கின்றீர்கள் என்பதை நீங்கள் என்னைப் பார்க்க விரும்பாததிலிருந்து தெரிந்துகொண்டேன்

அத்தான்! நீங்கள் விடுதலையாகி இன்று வந்து விடுவீர்கள் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. காலையிலேயே சில விஷயங்களை நான் தங்களிடம் கூறியிருக்க வேண்டும். சிறை வாழ்க்கையிலிருந்து விடுபட்டுப் புதிய உற்சாகத்தோடு ஊர் வந்திருக்கும் தங்களிடம், வந்ததும் வராததுமாக வேதனைமிக்க செய்தியைக் கூறக் கூடாது என்று நினைத்து வீட்டில் பிறகு கூறிக்கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் நீங்கள் வீட்டிற்கும்வர மறுத்து விட்டீர்கள்.

என்னைப் பற்றி ஊரார் பல விதமாகப் பேசிக் கொள்கிறார்கள். அவைகள் எல்லாம் தங்கள் காதிற்கு எட்டியிருக்கும். ஆனால் முழுவிவரம் யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள். நீங்களும் அறிந்திருக்கமாட்டீர்கள்.

"அத்தான்! நீங்கள் சிறைக்குச் சென்றபின் எங்கள் வீட்டு பூசையறையில் கொண்டு வந்து போடப்பட்ட அந்த அரசமரத்துப் பிள்ளையாருக்கு ஒரு யோகம் அடித்தது. அதற்குக் கோயில் கட்ட வேண்டும் என்று ஊர் பெரிய மனிதர்கள் ஒன்றுகூடிப் பேசி நிதி திரட்ட ஏற்பாடுகள் செய்தனர். அப்பா தான் அதற்கும் தர்மகர்த்தாவாக நியமிக்கப் பட்டார். பிள்ளையார் கோயில் நிதி பெருகிக் கொண்டே வந்தது. அக்கம் பக்கத்திலிருக்கும் ஊர்களிலிருந்தெல்லாம் பணம் வந்து குவிந்தது. கோயில் திருப்பணிகள் ஆரம்பமாயின. கோயில் பணியினைப் பார்வையிடுவதற்கும் மேற்கொண்டு அதற்குநிதி வழங்குவதற்கும் சிருங்காபுரம் மடாதிபதி நமது ஊருக்கு வந்திருந்தார். ஊர் சத்திரத்தில் ஒரு பெரிய சோற்றுப் பட்டாளமே வந்து இடம் பிடித்துக் கொண்டது.

கோயில் கட்டும் வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும் எனது திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று அப்பா எண்ணினார். சின்னையா மூப்பனாரின் மகன் கண்ணப்பனைக் கல்யாணம் செய்துகொள்ள என்னை வற்புறுத்தினார். ஆனால் நான் இசையவில்லை தட்டிக்கழித்துக் கொண்டே வந்தேன். ஆனால் பாபம்! அந்தக் கண்ணப்பன் எதிர்பாராத விதமாக இறந்து போனான். கண்ணப்பனுடைய முடிவு எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. ஆண்டு தோறும் நடக்கும் தீமிதி விழாவில் கண்ணப்பனும் நோன்பு பூண்டு கலந்து கொண்டான். பதினைந்து பேர்களுக்குமேல் அன்று தீயில் இறங்கினார்கள். தீக்குளத்தில் இறங்கிய கண்ணப்பன் பாதிவழியில் சென்றுகொண்டிருக்கும்போது அவனது கால் இடறிவிட்டது. அவ்வளவுதான்! தீயில் விழுந்துவிட்டான். ஒரு நிமிடம் தான் இருக்கும். அலறியபடி தீக்குண்டத்தில் புரண்டான். இதற்குள் கூட்டத்திலிருந்த இரண்டு மூன்று இளைஞர்கள் ஒரு ஓரத்தே பாய்ந்து சென்று கண்ணப்பனை வெளியே தூக்கி வந்து போட்டார்கள். ஆனாலும் அவனைக்காப்பாற்ற முடியவில்லை. சிறிது நேரத்திலேயே அவன் உயிர் போய்விட்டது. அவனைக்காண எனக்குப் பரிதாபமாக இருந்தது. அங்கு கூடியிருந்த மக்கள் நோன்பில் தவறு செய்ததால்தான் கண்ணப்பனுக்கு இந்தத் தண்டனை கிடைத்தது என்று பேசிக் கொண்டார்கள்.

இதற்குப்பிறகு அப்பா திருமணப் பேச்சை எடுப்பதில்லை. ஆனால் வேறு மாப்பிள்ளை தேடிக்கொண்டுதான் இருந்தார். நான் உங்கள் விடுதலை நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஊரிலே வந்து தங்கியிருக்கும் மடாதிபதியின் தரிசனங் காண எல்லாஊர்களிலிருந்தும் மக்கள் வந்தனர். அப்பா என்னையும் ஒரு நாள் அழைத்துக் கொண்டு சென்றார். எல்லோரும் அவனது காலடியில் வீழ்ந்து வணங்கிச் சென்றனர். அதுபோலவே நானும் அப்பாவும் வணங்கினோம். மடாதிபதி என் கையில் விபூதியைக் கொடுத்து ஆசீர்வதித்தான்.

நாட்கள் சென்றுகொண்டிருந்தன. வெள்ளிக்கிழமை பூசை என்றும் குரு பூசை என்றும் ஏற்பாடுகள் செய்து மக்கள் கூட்டத்தை வரவழைத்து, பிரசங்கங்கள் மூலம் அருள் மார்க்கத்தைப் பரப்பிக் கொண்டிருந்தான் அந்த மடாதிபதி. சில சமயங்களில் அத்தையம்மாளுடன் நானும் செல்வேன். கோயில் தர்மகர்த்தாவீட்டினராதலால் முன்பாக எங்களுக்கு இடம் தரப்படும். மடாதிபதி, பிரசங்கங்களின்போது எங்கள் பக்கம் பார்த்தபடியேதான் பேசுவான். அதிலும் என்னை விழுக்கிவிடுவது போலப் பார்ப்பான். அவனது பார்வையின் அர்த்தம் எனக்கு அப்பொழுது புரியவில்லை. மடாதிபதி அப்படித்தான் தோன்றுவார் போலும் என்று நான் எண்ணிக்கொள்வேன்.

ஒருநாள் சாயந்திரம் ஆறு மணியிருக்கும். அப்பா கோயிலிலிருந்து திரும்பவில்லை. அத்தையம்மா வீட்டினுள் இருந்தார்கள். பூசைக்குப் பூப் பரித்து வர தோட்டத்திற்குச் சென்றேன். நான் மலர்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது பின்னாலிருந்து யாரோ என்மேல் துணியைப் போட்டு மூடி வாயையும் அடைத்து என்னைத் தூக்கினார்கள். நான் சத்தம்போட முயன்றேன். திமிறினேன். ஒன்றும் முடியவில்லை. இரண்டு மூன்றுபேர்கள் என்னைக் கட்டித் தூக்கிச் சென்றார்கள்.

அத்தான்! அப்போது உங்களைததான் நினைத்துக்கொண்டேன். எனக்கு உதவி செய்ய

யாரும் இல்லை. அப்பா இல்லை என்றதும் தோட்டக்காரன் எங்கோ போய்விட்டான். யாராவது திடீரென்று தோன்றி என்னைக் காப்பாற்றமாட்டார்களா என்று கடவுளை வேண்டிக் கொண்டே இருந்தேன்.

என்னை ஒரு வண்டியில் வைத்து அழைத்துச் சென்றார்கள். எங்கு தூக்கிச் செல்லப்படுகிறேன் என்பது புரியவில்லை. எனக்குப் பயம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.

கடைசியில் எங்கோ வண்டி நிறுத்தப்பட்டது. என்னைக் கீழே இறங்கி நிற்கவைத்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருந்தார்கள். எங்கு இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ கதவு ஒன்று தட்டப்பட்டு, கதவும் திறக்கப்பட்டது. என்னைத் தூக்கிக்கொண்டு உள்ளே சென்றார்கள். ஒரு இடத்தில் என்னைப் படுக்க வைத்து எனது கை, கால்களைக் கட்டி முகத்தைத் துணியால் மூடிவிட்டுச் சென்றார்கள். சிறிது நேரத்தில் கதவு ஒன்று தாழிடப்படும் சத்தம் கேட்டது. யாரோ நடந்து வரும் ஓசை! என் மனம் பதறியது. வந்தவன் என்னை அப்படியே தூக்கி ஒரு படுக்கையில் வைத்து விட்டு என் முகத்தில் மூடப்பட்டிருந்த துணியை எடுத்தான். எங்கும் ஒரே இருள். நான் கண்ணை நன்றாக விழித்துப் பார்த்தேன். ஒரு மூலையில் விளக்கு சிறு திரியுடன் எரிந்துகொண்டிருந்தது. தலைப்பக்கம் அசைவு தோன்றவே தலையைத் திருப்பி பின்னால் பார்த்தேன். தாடியையுடைய ஒருவன் கூரிய கண்களுடன் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான். நான் அலறினேன், ஆனால் வாய் கட்டப்பட்டிருந்ததால் சத்தம் தொண்டையோடு நின்று விட்டது. அவன் எழுந்து சென்று அந்த விளக்கைத் தூண்டிவிட்டான்.

மடாதிபதி!

காம விகாரத்துடன். என்னைத் தின்று விடுவதுபோல் பார்த்தான். அனது நோக்கம் எனக்குப் புரிந்து விட்டது. எனது கால்களை ஒன்றாக சேர்த்துக் கட்டியிருந்தார்கள். கைகள் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. வாயைத் துணி இறுக்கிக்கொண்டிருந்தது. எனக்கு தப்புவதற்கு ஒரு வழியும் தோன்றவில்லை.

மடாதிபதி என்னை நெருங்கி வந்தான். கட்டப்பட்டிருந்த கால்களினாலேயே நான் ஒரு உதை கொடுத்தேன். அவன் அதை எதிர்பார்க்கவில்லை, நிலை தடுமாறி கீழே விழுந்து எழுந்தான்.

"பொன்னி! என் விருப்பத்திற்கு இணங்கி விடு! இல்லாவிட்டால் அப்படியே கொன்று யாருக்குந் தெரியாமல் மறைத்து விட என்னால் முடியும்." என்று கூறி வாய்க் கட்டை அவிழ்தான்.

"அக்கிரமக்காரா! என்னை விட்டுவிடு, இல்லாவிட்டால் கூச்சல் போட்டு எல்லோரையும் கூப்பிடுவேன்" என்றேன்.

"பொன்னி! நீ தொண்டை கிழியக் கத்தினாலும் இங்கு ஒரு அணு கூட அசையாது என்பதைத் தெரிந்துகொள். என் விருப்பத்திற்கிணங்க இன்று நடந்துகொள். வாழ்நாள் பூராவும் உன்னைக் காப்பாற்றுகிறேன். அணிமணிகளால் உன்னை அபிஷேகம் செய்கிறேன்" என்றான்.

"காமாந்தகாரப்பேயே! என் உயிருள்ள அளவும் என்னை நீ நெருங்க முடியாது." என்று கத்தினேன்.

"பார்க்கிறேன் அதையும்" என்று கூறி மறுபடியும் என் வாயை கட்ட முயன்றான். அப்போது அவன் கையைக்கூட கடித்துவிட்டேன். ஆனாலும் அவன் விடவில்லை. என் தலையை அழுத்திப்பிடித்து என் வாயை நன்றாகக் கட்டினான்.

"கொன்றுவிடு! கொன்றுவிடு!" என்று நான் கத்தினேன்.

"உன் விருப்பத்தை நிச்சயம் நிறைவேற்றுகிறேன்; என் விருப்பம் நிறைவேறினபிறகு." என்னை நெருங்கி உட்கார்ந்தான். கால்களை உதறினேன். கைகளை முறுக்கினேன்.

அத்தான்! பாம்பிடம் அகப்பட்ட தவளைபோலானேன் நான். காமவெறிகொண்டு அந்தக் காதகன் என்னை அலங்கோலப்படுத்திவிட்டான். வாயை அசைப்பதற்குக்கூட என்னால் முடியவில்லை. கைகளை என் பலங்கொண்ட மட்டும் முறுக்கி முறுக்கி கொஞ்சங் கொஞ்சமாக என் கைக்கட்டைத் தளர்த்தினேன். ஆனால் என் கைகளை நான் விடுவித்துக் கொள்வதற்குள் அந்தப் பாம்பு என்னைக் கடித்து விட்டது.

எனது கைக்கட்டு தளர்ந்து கைகள் விடுபட்டன. அப்படியே அவன் குரல் வளையைப் பிடித்துக்கொண்டேன். என் பலமனைத்தையும் உபயோகித்தேன். அவன் காலால் உதைத்தான். இருவரும் கீழே உருண்டு விழுந்தோம். என் பிடி தளரவில்லை. நன்றாக அழுத்தினேன். அவன்கைகள் சோர்ந்து விழுந்தன. அப்பொழுதும் நான் பிடியை விடவில்லை.

எங்கும் ஒரே அமைதி!

எனது பிடியைத் தளர்த்தி, கைகளை மெதுவாக எடுத்தேன். உயிரற்ற சடலமாக கீழே விழுந்தது அந்த மிருகம். வாய்க்கட்டு காற்கட்டுகளை அவிழ்த்துவிட்டு நான் எழுந்து நின்றேன். எனது கைகளில் ஏற்பட்ட நடுக்கம் தீரவில்லை. கோரமாக மடாதிபதி வீழ்ந்து கிடந்தான்.

அவனைக் கொன்ற கைகளால் எனது குரல்வளையையும் நெறித்துக் கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயன்றேன். நான் எவ்வளவோ முயன்றும் அது முடியவில்லை.

அத்தான்! தற்கொலைக்கான வழிவகைகள் அங்கு எனக்குத் தெரியவில்லை. ஊர்க்கோடியிலிருக்கும் பாழுங்கிணறுதான் என் ஞாபகத்திற்கு வந்தது. வருஷத்திற்கு இரண்டு மூன்று பேராவது அந்தக் கிணற்றில் விழுந்து இறப்பார்கள். அதுதான் எனக்கும் அமைதியை யளிக்கும் இடம் என்று முடிவு செய்துகொண்டேன்.

இந்தச் சமயத்தில் வெளியில் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. நான் ஒன்றும் புரியாமல் நின்றுகொண்டிருந்தேன்.

ஆனால் "பொன்னி! பொன்னி!" அப்பாவின் குரல் என்னைத் திடுக்கிடச் செய்தது. உண்மையா அல்லது மனப்பிரமையா என்று உற்றுக் கேட்டேன்.

அப்பாதான்! பலமாகத் தட்டிக்கொண்டிருந்தார். அப்பாவின் மேல்தான் எனக்கு ஆத்திரம் வந்தது. அப்பாவின் அழைப்பின் பேரில்தான் மடாதிபதி ஊரிலேவந்து தங்கினான். அவனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் நிலையைக் காணட்டும் என்று கதவைத் திறந்தேன்.

கண்கள்சிவக்க—ஆக்ரோஷத்துடன் அப்பா காணப்பட்டார். கையிலே ஒரு பெரிய தடி இருந்தது.

"அப்பா!" என்று கத்தியபடி அவரது காலடியில் விழுந்தேன்.

"பொன்னி! என்ன நடந்தது?"

"அதோ பாருங்கள்! அந்த மிருகத்தை."

மடாதிபதி இறந்து கிடப்பதைப் பார்த்து அப்பா திடுக்கிட்டுப் போனார். என் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு மடத்தை விட்டு வெளியேறினார். மடத்திலுள்ளவர்கள் அவரைத் தடுக்கவோ எதிர்க்கவோ முன்வரவில்லை. மூலைக்கொருவராக ஓடி ஒளிந்து கொண்டனர்.

அப்பாவிற்கு நான் மடாதிபதியின் ஆட்களால் தூக்கிச் செல்லப்பட்டிருக்கிறேன் என்ற செய்தியை யாரோ வந்து கூறினார்களாம், ' கோயிலிலிருந்த அவர் பதறிக்கொண்டு ஓடி வந்திருக்கிறார். மடாதிபதியைக் கொலைசெய்தாவது, என்னை மீட்க வேண்டும் என்று தான் அவர் வந்தார். ஆனால் காலம் கடந்துவிட்டது.

நான் கெடுக்கப்பட்டு விட்டேன் என்பதை அத்தையம்மாள் மூலம் அப்பாவிடம் தெரிவித்தேன். அப்பொழுது

(11-ம் பக்கம் பார்க்க)

மாற்றார் தரும் மதிப்பீடு!

சட்டமன்றம் புகுந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எவ்வளவு நாகரிகமாகவும், சிறப்பாகவும், உயர்வாகவும், கண்ணியமாகவும் நடந்துகொள்கிறார்கள் என்பதைக் காங்கிரசு ஏடான "**ஆனந்த விகடன்**" தன் 19–5–'57 இதழில் '**முதல் முழக்கம்**' என்ற தலைப்பின்கீழ்ச் சில கருத்துக்களைக் கூறியிருக்கிறது. அவை வருமாறு:

முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் அவர்களும், தி. மு. க. தலைவர் திரு அண்ணாத்துரை அவர்களும் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்த காட்சி அபூர்வமாக இருந்தது.

*   *   *

எதிர்க்கட்சியினர் சிறுபான்மையோர்தான் என்றாலும் அவர்களிடம் எதிர்க்கும் சக்தி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினாலோ என்னவோ, மந்திரிகள் ஒருவர் மாற்றி ஒருவர் தகுந்த பக்கபலத்தோடு இருந்து சபையைக் கண்காணித்து வந்தார்கள்.

*   *   *

கவர்னர் உரையில் குற்றம் குறைகள் காட்டிப் பேசிய தி. மு. க. தோழர்கள் எல்லாருமே அழகிய தமிழில் முழக்கம் செய்தார்கள். திரு அண்ணாத்துரை, மு. கருணாநிதி ஆசைத்தம்பி, அன்பழகன், சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசிய அடுக்கு மொழிகள் சபையில் மிக எடுப்பாக இருந்தன.

*   *   *

அரசாங்கத்தின் செல்வாக்கும் குறுக்கீடும் இல்லாமலிருந்தால் நாங்கள் ஆளுங்கட்சியாக வந்திருப்போம் என்று அன்பழகன் முதலிய தி. மு. க. தோழர்கள் அடிக்கடி கூறினார்கள். ஸ்ரீமதி குழந்தை அம்மாள் இதைப் பற்றி பிரஸ்தாபித்து, "அத்தைக்கு மீசைமுளைத்தால் சித்தப்பாதான். ஆனால் அத்தைக்கு மீசை முளைக்காது. அதைப்போல நீங்களும் பதவிக்கு வரப்போவதில்லை" என்றார். இதைக் கேட்டுச் சபையில் பெருத்த சிரிப்பொலி எழுந்தது.

மங்கும் மதிப்பு!

"மக்களுக்குக் காங்கிரசிடம் இருந்த பற்று தேய்ந்து வருகிறது. மக்களிடம் தொடர்புகொள்ள காங்கிரசு முயலவேண்டும்!" இவ்வாறு பண்டிதநேரு காங்கிரசுத் தொண்டர்களுக்கு போதனை தருகிறார்.

"இளைஞர்கள், மாணவர்கள் இவர்களிடை காங்கிரசுக்கு இருந்துவந்த செல்வாக்கு மங்கிவருகிறது. வாலிபர்களுக்குக் காங்கிரசிடம் தொடர்பு உண்டாக்க, புது அமைப்புகளைத் துவக்கி வேலை செய்யவேண்டும். அதற்கு மாதச்சம்பளத்தில் ஆட்களைப்போட்டு வேலை செய்தால், அவர்களுடைய செலவில் பாதியை அகில இந்திய காங்கிரசுக்கமிட்டி ஏற்றுக்கொள்ளும்" எனக் காங்கிரசுக் கமிட்டித் தீர்மானஞ் செய்துள்ளதாம்.

"கிராமங்களுக்குச் சென்று கிராம மக்களுக்கு ஊழியம் புரியுங்கள்!" எனத் தமிழ்நாட்டு காங்கிரசுப் புதுத்தலைவர் கே. இராசாராம் அவர்கள் காங்கிரசு ஊழியர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

காங்கிரஸ் தலைவர்களுக்குத் திடீரென பொதுமக்கள்மீது வாலிபர்கள் - மாணவர்கள் - கிராமத்தினர் மீது கவனம் சென்றுள்ளது. தலையில் நரை தோன்றி, நெற்றியில் சுருக்கம் விழுந்து, கண்கள் ஒடுங்கி, கன்னங்கள் ஒட்டி, வனம் சென்றுள்ளது. தேர்தலுக்கு எண்ணம் தோன்றும். நரம்பு தளர்ந்து, கைகால் உலர்ந்து போனபின், மீண்டும் வாலிபமாவதற்கு வழி என்ன என்று யோசிப்பார்கள். தலைக்கு மினுக்கெண்ணெய் தடவுதல், தங்கபஸ்பம் சாப்பிடுதல், முகத்தில் பவுடர், உடைக்கு செண்டு, கழுத்தில்சங்கிலி, காதில் வைரம், இப்படி வயோதிகத்தை மறைக்க வழிதேடுவார்கள். பளபளப்பு அதிகமாக அதிகமாக பதுங்கியிருக்கும் வயோதிகம் மிகுதியாக வெளிக்காட்டும்.

வாலிபத்தை கடந்தவர்கள்-இழந்தவர்கள், பஸ்பங்களையும் லேகியங்களையும் தேடியலைவதுபோல், காங்கிரசு தளர்ந்துபோன தனது கட்சியமைப்புக்கு புது முறுக்கு எப்படி உண்டாக்குவது என தேடியலைகிறது. வாலிப வனப்பு தேவை என உணர்கிறது, பணம் எவ்வளவு செலவழிந்தாலும் பாதகமில்லை, மினுமினுப்பு வந்தால் போதும என எண்ணுகிறது.

காங்கிரசுக்கு திடீரெனக் கவலை ஏற்பட்டுள்ளது. அந்த கவலை ஏற்பட்டுள்ள நேரம் தேர்தலுக்குப்பின்! காங்கிரசு வெற்றி பெற்று அரியாசனத்தில் வீற்றிருக்கும் சமயம்! வெற்றிபெற்ற காங்கிரசுத் தலைவர்கள் எதிர்க்கட்சியினை ஏளனத்துடன் பார்த்து பாரீர் இதோ! பாரத மக்கள் பார்த்து எங்களைப் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள்! உழவு மாடுகள் உழவின் ... ன், காங்கிரசு தேசத்தின் ... ன் என்பதை மக்கள் உணர்ந்தமையால்தான் எங் ... - காங்கிரசு அபேட்சகர் ... ஏகோபித்த மனதுடன் அனுப்பியுள்ளார்கள்!" என்று சொல்லவேண்டிய சமயம்! "காங்கிரசே இந்தியா, இந்தியாவே காங்கிரசு!" எனக் காங்கிரசுத் தலைவர்கள் மேடைகளில் எக்காளமிட்டுச் சொல்லியதுண்டு!

பெருவாரியான இடங்களில் காங்கிரசு வெற்றி பெற்றது, இருந்தாலும் தலைவர்களின் முகங்களில் வெற்றிக்களிப்பைக் காணோம், கவலைக் குறிகள் காணப்படுகின்றன.

தேர்தல் முடிவடைந்ததும், "மக்களுக்குக் காங்கிரசிடமிருந்த பற்று குறைந்து விட்டது, இளைஞர்களும், மாணவர்களும் காங்கிரசுக்கு எதிராக இருக்கிறார்கள்!" என்று காங்கிரசுத் தலைமை பீடமும் தலைவர்களும் ஒப்புக்கொள்கிறார்களென்றால், இளைஞர்களுடைய எதிர்ப்பையும் மிஞ்சி காங்கிரசு எப்படித் தான் வெற்றிபெற்றது?

"காங்கிரஸ்காரர்களிடம் மக்களுக்கு முன்பெல்லாம் இருந்த நம்பிக்கை போய்விட்டது. காங்கிரசுக்காரர்கள் மக்களிடம் மதிப்பிழந்து விட்டார்கள். ஒவ்வொரு காங்கிரசுக்காரர்கள் ஏதாவது பதவியுடன் ஒட்டிக்கொள்ளவே தயாராகின்றனர்." என்று காங்கிரசுக்காரர்களின் மதிப்பை பண்டித நேரு அவர்களே உரைத்துக் காட்டுகின்றார்.

மக்களின் நம்பிக்கை யிழந்த காங்கிரசு, மக்களிடம் மதிப்பிழந்த காங்கிரசுக்காரர்கள், பண்டித நேரு சொல்வது போல "பதவியுடன் ஒட்டிக்கொள்ளும்" காங்கிரசுக்காரர்கள் எப்படி தேர்தலில் பெருவாரியாக வெற்றிகண்டார்கள்?

காங்கிரசு நடத்திய தேர்தல் முறைகளினால், மக்களுடைய நம்பிக்கை யிழந்தவர்களும், மக்களிடம் மதிப்பற்றவர்களும், பதவிப்பித்தர்களும் பதவிக்கு வந்துவிட முடிந்திருக்கிறது!

இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரத்தைக் காங்கிரசு எந்த வகையில் உபயோகித்திருக்கிறதென்றால், மக்களிடம் மதிப்பிழந்தவர்களை ஒன்று சேர்த்துப் பதவிகளில் ஒட்டிக்கொள்ளச் செய்திருக்கிறது!

ராஜாக்கள், ஜமீன்தார்கள், முதலாளிகள், சிற்றரசர்கள், இவர்களெல்லாம் காங்கிரசிடம் வந்துவிட்டார்கள். வெற்றி பெற்றாக வேண்டும் என்ற வெறியில், கண்டவர்களை யெல்லாம் காங்கிரசு சேர்த்துக் கொண்டது.

அதனால் காங்கிரசின் தூய்மை கெட்டது காங்கிரசின் "கற்பு" கெட்டது.

ஒரு பெண்ணுக்கு அவளுடைய கற்பு எவ்வளவு முக்கியமாகக் கருதப்படுகிறதோ, அவ்வாறே ஒரு அரசியல் கட்சிக்கு அதனுடைய கொள்கைப் பற்று! கற்பை இழந்த மாது எவ்வளவுதான் ஆடம்பரமாக வாழ்ந்தாலும், மினுக்கி சாயம் பூசி அலங்காரமாகக் காட்சியளித்தாலும், மக்கள் அவளுக்கு மதிப்பளிக்க மாட்டார்கள். அவளைக் கண்டால் ஊரார் சற்று எட்டித்தான் செல்வார்கள். அவள்வாழ்வது ஏழடுக்கு மாளிகை என்றாலும், ராஜாக்கள், ஜமின்தார்கள், மிட்டா மிராசுகள் அவளிடம் எடுபிடி ஏவலாட்களாக இருக்கின்றார்கள் என்றாலும், நாட்டுமக்களும் நல்லவர்களும் அவளை மதிக்க மாட்டார்கள். ஆனால் அதே சமயம், குடிசையில் ஏழைப் பெண்ணொருத்தி கொண்ட கணவனுடன் வாழ்கிறாள், ஏழ்மைக்கு அஞ்சி அவள் தன் கற்பை இழந்திலை! ஏழடுக்கு மாளிகையில் உல்லாசமாக உலவிடும் சீமாட்டியை மதிக்க மறுக்கும் ஊர் மக்கள், குடிசையில் வாழும் அந்த ஏழைப்பெண்ணை போற்றுகிறார்கள்!

அதேபோல் கொள்கைப் பற்று இல்லாத ஒரு அரசியல் கட்சி எவ்வளவுதான் கோலாகலமாக காட்சியளித்தாலும், மக்களுடைய கவனமும் மதிப்பும் கொள்கைப் பற்றுடன் விளங்கும் கட்சியின்பால் அது வளமையற்று வெற்றிக்கான வசதிகளற்று ஏழ்மைக் கோலத்தில் இருந்தாலும் குடிசையில் வாழ்ந்திடும் குலப் பெண்ணிடம் ஊர் மக்களின் மதிப்பு வளர்வதைப்போல வளர்கின்றன. காங்கிரசுக் கட்சி கொள்கைப்பற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்தது போய், அது இப்பொழுது ஆதிபத்தியக்காரர்களின் கூடாரமாகிவிட்டது. பிர்லா, டாட்டாக்களின் எடுபிடிப் பாவையாகி விட்டது! அதனால்தான் மக்களின் மதிப்பு அதற்குப் போய்விட்டது, இளைஞர்கள் மாணவர்கள் அதை எதிர்காலத்தில் நம்பிக்கை தரும் இடமாக ஏற்க மறுக்கின்றனர்! அந்த நிலையை மாற்ற பணத்தைக் கொண்டு பணிபுரிந்தால் போதாது! கொள்கைப்பற்றும் நாட்டுப்பற்றும் மிக்கு விளங்குகிற அரசியல் கட்சிகள் பெறுகிற மதிப்பை காங்கிரசால் பெற முடியாது போனதற்குக் காரணம், காங்கிரசைவிட்டு மக்கள் செல்லவில்லை, மக்களைவிட்டு காங்கிரசு தேர்தல் வெற்றிகளைத்தேடி வெகுதூரம் சென்றுவிட்டது!

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின்
காரணத்தை அறிய — திராவிட முன்னேற்றக் கழகத்தின்
உயிரோட்டம் உலகு அறிய

'HOMELAND'

'ஆங்கில வார இதழ்'

ஆசிரியர்: அண்ணா

★

2-6-57 முதல் ஞாயிறுதோறும்
வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா — ஆண்டு சந்தா ரூ 7

விவரங்கட்கு: நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு : காஞ்சீபுரம்

இலக்கியத்தில் மாட்டுப்பெயர்கள்

பண்டைக் காலத்திலிருந்தே மிருக இனங்களுக்கும் பெயரிடுதல் வழக்கத்திலிருந்திருக்கிறது. ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரித்துக் காட்டச் சிறப்புப் பெயர்கள் வைக்கப் படுகின்றன.

மனிதர்களில் ஒருவனுக்கு "மணி" என்றும் மற்றொருவனுக்கு "முத்து" என்றும் பெயர்கள் தரப்படுகின்றன, ஒருவனை மற்றொருவனிடமிருந்து பிரித்துக் காட்ட! இருவரும் வரும்பொழுது "மணி" என அழைக்கப்பட்டால் ஒருவன்தான் முன்வருகிறான். "முத்து" என்றால் மற்றொருவன் முன் வருகிறான். ஒரு இனத்துக்குள்ளே ஒருவனை மற்றொருவனிடமிருந்து பிரித்துக்காட்ட சிறப்புப்பெயர்கள் தரப்படுகின்றன.

அதேபோல் நாடு, நகரங்கள், தெருக்கள், மலைகள், ஆறுகள், காடுகள், கடல்கள் முதலிய வற்றிற்கும் தனியான சிறப்புப்பெயர்கள் தரப்படுகின்றன. அவைகளைக் கூப்பிட்டால் ஏனென்று கேட்கமாட்டாதன என்ற போதிலும், நமக்கு அவைகளைத் தனிமைப் படுத்திப் பேசுவதற்காக பெயர்களிடப்படுகின்றன.

மந்தையாக நிற்கும் ஆடுகளையோ மாடுகளையோ, குதிரைகளையோ, ஒன்றையொன்று தனிமைப்படுத்திக் கூறவேண்டிய அவசியமில்லாத பொழுது தனிப்பெயர்கள் வைக்கப்படுவதில்லை. ஆனால் குதிரைப் பந்தயத்தில் பலகுதிரைகள் நிறுத்தப்பட்டு, ஒவ்வொரு குதிரையையும் தனியாகக் கவனிக்கவேண்டிய அவசியம் நேரும்பொழுது, அவைகளுக்குத் தனிப்பெயரிடப்படுகிறது. புகழ்பெற்ற குதிரைகள், தகப்பன்பெயர், பாட்டன் பெயர், இப்படி ஒரு அரசகுடும்பத்தின் வம்சாவளி பாதுகாக்கப்படுவதைப்போல, சிறப்புப் பெயர்கள் தரப்படுகின்றன.

நாய்களுக்குப் பெயர்கள் தரப்படுகின்றன. வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு ஏதாவதுஒரு பெயரைவைக்கத் தவறுவதில்லை. பெயர்கள் பொருத்தங்கூட இல்லாமலிருக்கும். "டைகர், டைகர்!" என்று அழைப்பார்கள் மிகச் சோம்பலுடன், எலும்பு ஒட்டி ஒருநாய் வந்து நிற்கும்! ஏதோ வளர்க்கும் நாய்க்கு பெயரிட்டு அழைக்கவேண்டுமென்பதற்கு ஏதாவது பெயர் வைத்துவிடுவது!

குதிரைகளுக்கும், நாய்களுக்கும் பெயர்வைப்பதைப் போலவே மாடுகளுக்கும் தமிழர்கள் பெயர்வைத்தார்கள்.

சிற்றூர்களில் உழவர்களுடைய வாழ்வில் மிகமுக்கியமாக விளங்குவது அவர்கள் வைத்திருக்கும் மாடுகள்தாம்! மாடுகளை அன்புடன் வளர்க்கும் அவர்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு செல்லப் பெயரிட்டு அழைத்தனர். பெயர்கள் பெரும்பாலும் காரணப்பெயர்களாக இருக்கும். ஒருமாட்டுக்குக் கொம்பு வளைந்துஇருக்கும் அதைக் "குடைக்கொம்பன்!" என்று கூப்பிடுவார்கள். இன்னொரு மாட்டின்மேல் சிவப்பு நிறம் படர்ந்திருக்கும் அதை "செம்மறையன்" என்று அழைப்பார்கள். மாட்டுக்கு கொம்பு வளைந்து ஒன்றோடொன்று கூடும்படி இருக்கும் அதைக் "கூடுகொம்பன்" என்று கூப்பிட்டால் அந்த மாடு தலையசைக்கும். "டேய் வெள்ளை!" என்று சத்தம் கொடுத்தால், வெள்ளை நிறமான காளைவந்து நிற்கும். மாடுகளுக்கு வாலைக்கொண்டும் காலைக்கொண்டும், கொம்பைக் கொண்டும் காதைக்கொண்டும் ஏதாவது பெயர்தந்து அழைப்பார்கள். அது அந்த மாட்டின் பெயராகிவிடும்.

உழவர்கள் மாடுகளுக்கு இடும்பெயர்களை ஒன்று சேர்த்து, முக்கூடற் பள்ளு ஆசிரியர் ஒரு பாட்டில் தந்துள்ளார்.

"குடைக்கொம்பன் செம்மறையன் குத்துக்குளம்பன் மேழை
குடைச்செவியன் குற்றாலன் கூடுகொம்பன்
வடர்புல்லை கரும்போரான் மயிலை சுழற்சிக்கண்ணன்
மட்டைக்கொம்பன் கறுப்பன் மஞ்சள்வாலன்
படப்புப்பிடுங்கி கொட்டைப் பாக்கன் கருமறையன்
பசுக்காலன் அணிற்காலன் படலைக்கொம்பன்
விடர்த்தலைப் பூநிறத்தான் வெள்ளைக் காளையும்இந்த
விதத்திலுண் டாயிரமே மெய்காணுண்டே."

(குடைக் கொம்பன்-வளைந்த கொம்பையுடையது, செம்மறையன்-சிவந்த கறையுடையது, கூடு-நுனி கூடிய, புல்லை, மயிலை-புல்லை, மயிலை நிறமுடையவை, குற்றாலன்-குற்றாலத்திலிருந்து வந்தது, கழற்சிக் கண்ணன் - கழற்சிக்காய் போன்ற கண்ணுடையது, மட்டை - நேராக வளராமல் வளைந்த, பட்டையான, கருமறையன்-கரிய கறையுடையது படலை-பரந்த).

பள்ளுப்பாட்டு என்பது, உழவர்கள் வாழ்வை அடிப்படையாகவைத்துப் பாடப்படுவது. அதில் நாட்டுவளம் ஆற்று வெள்ளம், உழவனின் குடும்பப்பெருமை, உழத்தியர்கள் போட்டுக்கொள்ளும் சண்டை முதலியன இருக்கும் பள்ளுப் பாட்டுகளில் மூத்தபள்ளி, இளையபள்ளி என இரண்டுபேர்கள் பள்ளனுக்கு மனைவிகளாக வருவார்கள். வாய்ச் சண்டைக்குக் கேட்க வேண்டுமா? பள்ளுப்பாட்டில் பாதி அவர்கள் சண்டைப் பாட்டாகயிருக்கும்.

பள்ளுப்பாட்டுகள் பொதுவாக கிராமீய பழக்கவழக்கங்களைச் சித்தரிப்பனவாக இருக்கும். தமிழில் இப்பொழுதுள்ளவற்றில் சிறந்ததாகக் கருதப்படுவது, முக்கூடற் பள்ளு ஆகும். 0

சேலம் தேர்தல் வழக்கு நிதி!

12-5-57 இல் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில்: திருச்சி நகர தி. மு. கழகம் ரூ. 700-00; திருச்சி இரயில்வே தொழிலாளர்கள் ரூ. 36-06; மணச்சநல்லூர் தி. மு. க. ரூ. 10-00. திருச்சி பெரிய கடைவீதி தி. மு. க. ரூ. 10-00; திருச்சி 20வது வட்டம்தி. மு. க. ரூ. 10-00; திருச்சி மேலப்புலிவார்ரோடு தியாகராசன், மாரிமுத்து, சந்திரன் ரூ. 10-00; குளித்தலைத் தொகுதி தி. மு. க. ரூ 10-00; திருச்சி இடைத் தெரு தி. மு. க. ரூ. 7-00; துறையூர் பாலசுந்தரம் ரூ. 5-00; திருச்சி அண்ணா படிப்பகம் ரூ. 5-00; சாத்தமங்கலம் தி. மு. க. ரூ. 5-00; சீரங்கம் தி. மு. க. ரூ. 5-00; கொப்பம்பட்டி ஆறுமுகம் ரூ. 5-00; மதுரை நா. பாலகிருட்டினன் ரூ. 5-00; து. ப. அழகமுத்து ரூ. 5-00; எடமலைப் பட்டி தி. மு. க. ரூ. 5-00; 17வது வட்டம் தி. மு. க. ரூ. 5-01; சிறு தொகைகளாகக் கொடுக்கப்பட்டது ரூ. 27-74.

12-5-57 இல் உறையூரில் நடைப்பெற்ற பொதுக் கூட்டத்தில் ரூ. 14-57;

13-5-57 இல் முசிறி தி. மு. க. பொதுக்கூட்டத்தில்: குளித்தலை கணபதி ரூ. 10-00; தாத்தையங்கார் பேட்டை முத்துக் கருப்பன் ரூ. 5-00; சிறு தொகைகளாகக் கொடுக்கப்பட்டது ரூ. 12-00.

14-5-57 இல் அம்பில் பொதுக்கூட்டத்தில் ரூ. 1-53

14-5-57 இல் செங்கரையூர் பொதுக்கூட்டத்தில் ஆலங்குடி வி. கோவிந்தராசு ரூ. 5-00; சிறு தொகைகளாக ரூ. 14-00.

19-5-57 இல் ஏற்காடு தொகுதிக் கூட்டங்களில்; பேளூர் ஜே. சமத் ரூ. 10-5. சிறுதொகைகளாக ரூ. 9-90.

20-5-57 இல் சிதம்பரத்தில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்கூட்டத்தில்: சிதம்பரம் நகரக்கிளை ரூ. 25-00. வெண்சங்கு சீயக்காய்த்தூள் கம்பெனி தொழிலாளர்கள் ரூ. 6-31; கிழ்ச்சாவடி பட்டாபிராமன் ரூ. 5-00; சிறு தொகைகளாக ரூ. 8-00

மணியாடர் மூலம் வந்தவை: விருதுநகர் டெக்ஸ்டைல் மில் தொழிலாளர் ரூ. 31-50; வெள்ளூர் நண்பர்கள் படிப்பகம் ரூ. 5-00; ஆமதாபாத் பி. எஸ். வெங்கடதாஸ் ரூ. 3-00 சென்னை எம். சுந்தரம்மூலம் ரூ. 5-00; மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் மாணவர்கள் எம். தங்கராஜன் மூலம் ரூ. 20-74.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

இரா. நெடுஞ்செழியன்,

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை—1.

புதுவரிகள் கண்டன நாள்!

26-5-57 ஞாயிறன்று நாடெங்கும் எதிர்த்து முரசறைவீர்!

26-5-57 ஞாயிற்றுக்கிழமையை, புதிய வரிகள் விதிப்பிற்கு நாடெங்கும் கண்டனம் தெரிவிக்கும் நாளாகக் கொண்டு, ஆங்காங்கு அமைதியான முறையில், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தி மக்களின் எதிர்ப்புக் குரலை, தீர்மானங்கள் மூலம் காட்டி, இந்தியப் பேரரசினரும், அந்தந்தத் தொகுதி மக்கள்சபை உறுப்பினர்களும் உணரும்படி ஆவனவெல்லாம் செய்ய முன்வருமாறு தி. மு. கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

20—5—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

கடவுள் இங்கே !

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ர் பட்ட வேதனை என் இத தைத் துளைத்தது – சுவற் ல் முட்டிக்கொண்டு அழு . நானும் அழுதேன். லோரும் அழுதோம்.

ப்பாவும், அத்தையம்மா தூங்கிய பிறகு நான் டைவிட்டு வெளியேறி ஊர் டியில் இருக்கும் பாழுங் ற்றை நோக்கிச் சென் ன். தற்கொலைதான் சரி ன வழி என்று எனக்குத் ன்றியது. ஆனல் கிணற் விழப்போகும் சமயம் லயில் என்னுடன் இருந்த யவர் வந்து என்னைத் த்து நிறுத்தினர். ரயில்வே டேஷனுக்குச் சென்று ண்டிருந்த அவரும் இன் சிலரும் நான் கிணற்றின் ல் நின்று கொண்டிருந்த ப் பார்த்து ஓடி வந்து விட் கள்.

அவர் கூறிய அறிவுரை ஞல் நான் தற்கொலை ற்சியைக் கைவிட்டேன். த்தான் ! அவர் பெயர் சச்சி னந்தம். அவர் மடாலயத் ருந்து வெளியேறிய ஒரு திருத்தவாதி. மடங்களிலே க்கும் அக்கிரமங்களையும் வுளின் பெயரால் மக்கள் வாறு ஏமாற்றப்படுகின் ர் என்பதையும் அவர் க்கடி எடுத்துக்காட்டுவார்.

க இருந்த என்னைத் த்து வீட்டிற்கு அழைத்து து அப்பாவிடம் ஒப்படைத் . அவருக்கு அப்பா நன்றி ரிவித்து எங்களுடன் சில கள் தங்கும் படிக் கேட்டுக் ண்டார். ஆனல் அவர் நதரமாகவே எங்களுடன் க்கவேண்டிய நிலைமை ஏற் டுவிட்டது.

ண்டாரசந்நிதி கொலை செய் பட்டார் என்ற செய்தி மறு காலையில் ஊரிலே பரவி டது. போலீசார் வந்து பாவை கைது செய்து ழைத்துச் சென்றார்கள். திரும்பும் வரை எங்க பார்த்துக்கொள்ளும்படி ரிய வரிடம் கேட்டுக் ண்டு அப்பா சென்றார்.

பாலீசார் தொடுத்த வழக்கு த்திரமாக இருந்தது. பண சந்நிதிப் பட்டத்திற்கு புதிய தம்பிரான் தனது வாக்கையும் பண பலத் யும் பயன்படுத்த வழக்கின் க்கையே மாற்றினன். யில் பணத்தை அப்பா பாண்டு மோசடி செய்த வும், அதன் காரணமாக ட்ட சச்சரவினல் மடாதி யை அப்பா கொன்று விட் கவும் வழக்கை ஜோடித் கள். வழக்கு மூன்று மாத ம் நடைபெற்றது. அப்பா வாக்கு மூலத்தை ஜுரர் ஏற்றுக்கொள்ள வில்லை. சியாக தீர்ப்பு வழங்கப் து. கொலைக்கான சாட்சி ள் இல்லாததால் அப்பா கொலைக் குற்றத்தினின் றும் விடுதலை செய்தார்கள். ஆனல் பண மோசடி வழக்கில் அப்பாவிற்கு இரண்டாண்டு கள் சிறை வாசம் கிடைத்தது. அவர் விடுதலையாகி வருவதை எதிர்பார்த்துத் தான் காலை நான் ரோட்டில் நின்று கொண் டிருந்தேன். நீங்கள் சென்ற சிறிது நேரத்திற்குப் பின் அப்பா வந்தார்கள்.

அத்தான் ! இது தான் நீங் கள் சிறைக்குச் சென்ற பின் இங்கு நடந்த உண்மை. ஊரிலே நாங்கள் நாத்திகக் கூட்டத்தினரென்றும் நான் நடத்தை கெட்டவள் என்றும் பேசிக்கொள்கிருர்கள். ஆனல் எதைப்பற்றியும் நான் கவலை கொள்ள வில்லை. எங்களுக்காக கவலை கொள்பவர்கள் இங்கே யாரும் இல்லை. நீங்கள் கூட என்னைப் பார்ப்பதற்கும் மன மில்லாமல் வெறுக்கிறீர்கள். நேற்றுவரை விரும்பப்பட்டு இன்று காலையிலிருந்துமட்டும் வெறுக்கப்படும் என் நிலையே இப்படி என்றல், அன்று தொட்டு இன்றுவரை இழித் தும், பழித்தும், வெறுத்தும் ஒதுக்கப்பட்டு வந்த சமூகத் தின் நிலை ! நலிந்து சமுதாயத் திற்கு வலிவூட்டப் போகிறேன் அத்தான் ! ஆம் ! மக்கள் மனம் திருத்தவும் அவர் தம் உடல் நலம் பெறவும் மருத்து வப்பணி புரியப் போகிறேன்!

நாங்கள் இப்பொழுது சென்னைக்குச் செல்கிறோம். அங்கே நான் பள்ளியுடன் நிறுத்திவிட்ட படிப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப் போகிறேன். எனது வாழ்வின் குறிக்கோள் டாக்டராகப் பணி யாற்ற வேண்டும் என்பது தான்.

அத்தான் ! நான் உங்களை உளமாற காதலித்தேன். உங் கள் அன்பையும் பெற்றேன். என் இதயத்தில் வேறு எவ ருக்கும் இடம் அளித்ததில்லை. இனியும் இருக்காது. அத் தான் ! உங்களுடன் வாழும் பேறு எனக்குக் கிட்டவில்லை. நீங்கள் இப்போது மாறியிருக் கும் நிலையில், உங்களை மணந்து கொள்ள பலர் முன்வருவார் கள். உங்கள் மனதிற்குப் பிடித்த ஒரு பெண்ணை மணந்துகொண்டு நீங்களாவது சுகமான வாழ்வை நடத்த முற் படுங்கள். உங்கள் வாழ்க்கை யில் குறுக்கிட்ட பொன்னியை மன்னித்து அவளை மறந்து விடுங்கள் !

அத்தான் ! கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். "கடவுள் எங்கே"? நீங்கள் கேட்ட இந்தக் கேள்வியைப்பற்றி மட் டும் சில வார்த்தைகள் குறிப் பிட்டு முடித்துக்கொள்கிறேன்.

"பொன்னும், மணியும் மனி தன் தன் சந்தோஷத்திற்காக ஆண்டவனுக்கு அணிகிறன். ஆனல் ஆண்டவனுக்கு மண் ணும் ஒன்றுதான் மாணிக்க மும் ஒன்றுதான். அவைகளை ஆண்டவன் கட்டிக் காத்துக் கொள்வான் என்று எதிர் பார்க்க முடியாது."

அத்தான் ! இது போன்ற சொத்தை வாதங்கள் எழுப்பப் படுகின்றன, கடவுள் எங்கே ? என்ற கேள்விக்குப் பின்னல். இவ்வுலகில் உள்ள பொருள் கள் அனைத்தும் ஆண்டவ னல்-இது இங்கே இருக்க வேண்டும் என்று சரிபார்க்கப் பட்டு-படைக்கப்படுவதாகக் கூறப் படுகிறது. உயிர்வாழ எண்ணி தாவிக் குதித்துச் செல்லும் தவளையை இந்த ஆண்டவன் தான் படைக் கிறன். அதனைக் கொன்று தின்ன சீறி எழும் பாம்பின் படைப்பிற்கும் இந்த ஆண்ட வன்தான் காரணமாகின்றன்.

எனது கற்பு கெடக்கூடாது. அந்தக் கொடுமையினின்றும் மீள வேண்டும் என்று நான் துடியாய்த் துடித்தேன். என் னைப் படைத்து, என்னைக் கெடுத்த இந்த மடாதிபதியை யும் இந்த ஆண்டவன் ஏன் படைத்தான் ?

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று கூறப்படு கிறது. நாட்டிலே இன்று பலப்பல இடங்களில் பெண் கள் பலாத்காரமாகக் கற்பழிக் கப் படுகின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப் படி அவர்கள் கற்பழிக்கப்படு வதும் இந்த ஆண்டவனின் அனுமதியினல்தானு ?

அத்தான் இதுபோன்று பலப்பல கேட்கலாம். இதனல் கடவுள் இல்லை என்று நான் கூறவில்லை. கடவுள் என் பதற்குக் கூறப்படும் தன்மை கள், விளக்கங்கள், வியாக்கியா னங்கள் யாவும் பகுத்தறிவிற்கு ஒத்து வருவதாக இல்லை. அந் தத் தன்மைகள், விளக்கங்கள் வியாக்கியானங்கள் ஆகியவற் றிற்கு உட்படுத்தப்பட்டு கூறப் படும் அந்தக் கடவுளை மறுக்க வேண்டிய அவசியம் ஏற்படு கிறது.

அத்தான் ! நீங்கள் ஊரிலே சீர்திருத்தப்பணி செய்யத் தொடங்கிய போது உங்கள் குறிக்கோள் நன்ருக அமைந் திருந்தும் நீங்கள் எடுத்துக் கொண்ட செயல்முறைத் திட் டங்கள் சரியானதாக இல்லை. இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்கள் மனதிலே ஏற்றப்பட் டிருக்கும் மூடநம்பிக்கையை ஒரே நாளில் அகற்றிவிட முடி யாது. ஒரு அரச மரத்துப் பிள்ளையாரை நீங்கள் உடைக் கலாம். ஆனல் ஒன்பது பிள் ளையார் கோவில்கள் கட்டும் அளவிற்கு ஊராரிடையே மூட நம்பிக்கை ஊறிக்கிடக்கின்றது.

நீங்கள் பிள்ளையாரை உடைக் கும் நோக்கத்தில் அந்த அவ சரத்தில் உங்கள் தந்தையைக் கண்ணை மூடிக்கொண்டு கொலை செய்திருக்கிறீர்கள். இதனல் பிள்ளையார் சிலை உடைக்க முடியாத ஒரு பொருள் என்று கூறிவிட முடியாது. அது விரும்பத் தகாத செயல்களில் ஒன்றே அன்றி ஆகமுடியாத காரியம் அல்ல. உங்கள் தந்தை இறந்து விடவே நீங்கள் கடவுளைக் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறினீர்கள்.

அத்தான் ! பள்ளியில் ஒரு சமயம் கேட்ட கதையொன்று நினைவிற்கு வருகிறது. பேய் பிசாசுகளில் நம்பிக்கையில் லாத ஒருவனும் அவ்வித நம் பிக்கையுடைய ஒருவனும் பந் தயம் வைத்துக் கொண்டார் களாம். நடு இரவில் ஒரு குறிப்பிட்ட வேப்பமரதிற்குச் சென்று அந்த நம்பிக்கையில் லாதவன் ஒரு ஆணியை அடித்துவிட்டுத் திரும்ப வேண்டும் என்று பந்தயம் ஏற் பட்டது. அந்த நம்பிக்கையில் லாதவனும் தைரியமாகச் சென்று ஆணியை அடித் தான். ஆனல் அவசரத்தில், இருட்டு நேரத்தில் காற்றிலே அசைந்துகொண்டிருந்த தன் சட்டையையும் அடித்து விட்டு திரும்பினன். சட்டை இழுக் கவே, பிசாசுதானே என பயந்து அதனலேயே இறந்தா னும்.

நீங்கள் அவசரத்தில் உங் கள் தந்தையைக் கொன்றீர் கள். அதனலேயே நீங்கள் கடவுளைத் தெரிந்து கொண்டீர் கள் என்று கூறினல் அது பேய் பிசாசு நம்பிக்கையில் லாதவன் வேப்பமரத்தில் ஆணி அடிக்கச்சென்ற கதை யைப் போல்தான் இருக்கிறது.

அத்தான் ! கடவுள் இங்கே தான் இருக்கிருர் உழைத்து உழைத்து இந்த உலகை உரு வாக்கி வரும் தொழிலாளி தான் அந்தக் கடவுள் ! அவ னுக்குத் தொண்டு செய்வ தையே நான் விரும்புகிறேன்.

அத்தான் நேரம் இல்லை ! ரயிலுக்குப்போக வண்டியும் வந்துவிட்டது. இத்துடன் முடித்து உங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன்.

உங்கள்
பொன்னி.

* * *

பெரியசாமி கடிதத்தை மடித்து பையில் போட்டுக் கொண்டு ரயில்வேஸ்டேஷனை நோக்கி விரைந்தான். ஆமாம்! அடுத்த வண்டியில் பெரிய சாமியும் சென்னைக்குப் பயண மானன். ○

'சோஷியலிச மாதிரியில்' வரிக்குமேல் வரி !

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது ! அந்தக் குரல் தான் அண்மையில் மக்கள் சபையில் இந்திய அரசாங்கம்சமர்ப்பித்த பட்ஜெட், 1957-58 வரவு-செல வுத் திட்டம் !

வெள்ளைப் புரவியின் வெற் றிக் கோலத்தைக் காணக் கூடிய மக்களின்முன் வெள்ளி மூக்குப் புரவி நிறுத்தப் பட்டதைப்போல, வெற்றி வாகை சூடிய காங்கிரசின் மகிழ்ச்சி செய்திகளைக் கேட்கக் காத்திருந்த நேரத்தில் நாட்டு மக்களின்முன் நிதி மந்திரியா ரின் அநீதித் திட்டம் நிற் கிறது !

கண்கவர்ப் புரவியைக் காண வந்தோர் கர்த்தபத்தின் நீண்ட முழக்கங்கேட்டு கலங்கி நின்றதைப்போல, நிதிமந்திரியார் தந்த நீண்ட வரிகள் நாட்டுமக்களை கலக்கமடையச் செய்துள்ளது!

ஆண்டு தவறினாலும் தவறும் காங்கிரசாட்சியில் வரிகள் தவறாமல் வருகின்றன! ஒவ்வொரு ஆண்டும் தேடிப்பிடித்துப் புதுப்புது வரிகளை வீசுகின்றனர், பழைய வரிகளை அதிகமாக்குகின்றனர்! காங்கிரசு ஆட்சிக்கு வந்த பத்தாண்டுகளில் மக்களின்மீது சுமத்தப்படும் வரிப்பளு அதிகமாகிக்கொண்டே போகின்றது. வாழ்க்கைத்தரம் தாழ்ந்தபடி இருக்கின்றது. கூலி குறைவு, விலைவாசிகள் அதிகம், வேலையில்லை, பகல்பட்டினி இராப்பட்டினி, பஞ்சமும் பட்டினியும் இல்லாமைபோதாமையும் நோய்நொடியும் அகாலச் சாவுகளும் — இவைகளனைத்தும் நாட்டில் தொடர்ந்து அல்லற்படுத்தும் வேளையில் நிதிமந்திரியார் வரிக்குமேல் வரிபோட்டுத் தள்ளுகிறார்!

வரிக்குமேல் வரிபோடுகிறார்! நிதித்திட்டத்தில் வரிக்கு வரி, ஒரு புதிய வரிச்சுமை இருக்கிறது! ஒன்று இரண்டல்ல, 112 வரிகளை நிதி மந்திரியார் கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் போட்டிருக்கிறார்! இந்திய அரசாங்கம்-காங்கிரசின் தலைமைப் பீடம் போடச்செய்திருக்கிறது! சர்க்கரை, காபி, தேயிலை, தீப்பெட்டி, புகையிலை, தபால் அட்டைகள், சிமெண்ட், பெட்ரோல், எண்ணெய், இப்படி மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல்வகைப் பொருள்களின் மீதும் வரிகள் உயர்ந்துவிட்டன.

புதிய வரிவிதிப்புகளினால் ஆண்டு ஒன்றுக்கு 100-கோடி ரூபாய்களுக்கு மேலாக வரிப்பணத்தைத் திரட்ட காங்கிரசு அரசாங்கம் முனைந்துள்ளது.

தேர்தல் முடிந்து இரண்டு மாதங்களுக்குள், வாக்காளர்களுக்குக் காங்கிரசு தரும் புதிய பரிசு 100கோடி ரூபாய்க்கான புதிய வரிச்சுமை! போடப்பட்ட வரியில் 75 கோடி ரூபாய்க்குமேல், பொதுமக்கள் மீது—ஏழை பாழைகள், நடுத்தர மக்கள்மீது சுமத்தப்படுகிறது. பாக்கியிருக்கும் கம்பெனி வருமான வரிகள் சுற்றி வளைத்து, விலைகளை அதிகரித்து, மக்கள்மீது விழும்!

“சோஷியலிச மாதிரி” அரசியல் கொள்கையினால் காங்கிரசு போடுகிற வரிக்குண்டுகள் மாடமாளிகைகளைத் தாக்கவில்லை, குடிசைகளை மட்டும் தாக்கியிருக்கிறது!

அதிகவரி போட்டால் அந்நிய முதலாளிகள் இந்தியாவுக்குள் வரமாட்டார்களென அவர்களுக்குச் சலுகைகள் தருகிறது காங்கிரசு அரசாங்கம்! ஆனால் இந்த நாட்டு ஏழை மக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. பாதுகாப்பைத் தராமல் இருப்பதுமட்டுமல்ல புதிய பாரத்தைத் தந்துவிட்டது!

அதிக வருமானங்கள் மீது அதிகப்படியான வரியைப் போட்டால், வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி, உயர்தர வருமானங்களின்மீது இருந்த வரிப்பளுவைத் தளர்த்தி, வேறு வகைகளில் ஈடுசெய்ய நிதி மந்திரி முயலுகிறார். ஏமாற்றப்படும் வருமான வரிகளைக் கண்டு பிடித்து, வசூல் செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு! அரசாங்கத்தின் திறமையற்ற தன்மையால் கோடிக்கணக்கில் வருமான வரிகள் கண்டுபிடிக்கப் படாமல், தெரிந்தும் தெரியாமலும் விடப்பட்டுவிடுகின்றன!

“கள்ள மார்க்கட்காரர்களை தூக்கில் மாட்டுவேன்” என நேரு பண்டிதர் ஒரு காலத்தில் மேடையதிர முழங்கினார். பண்டிதரின் வீரப்பேச்சுகள் வீணாகி விட்டன. காங்கிரசும் காங்கிரசு அரசாங்கமும், இன்று கள்ள மார்க்கட்காரர்களின் கழுத்தில், தூக்குக் கயிற்றை அல்ல மலர்மாலையைப் போட்டு வரவேற்பு தந்துகொண்டிருக்கின்றனர்! ○

ஓவியக்கலை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பது ‘புனையா ஓவியம்’ (Line Drawing) என்று சங்க நூல்களில் குறிப்பிடப்படுவதன் மூலம் அறியலாம். வண்ணக் குழம்புகளால் வண்ண ஓவியங்கள் வரைந்து மகிழ்ந்தனர் பண்டைத் தமிழர் என்றும் தெரியவருகிறது. வெண்மையான சுண்ணாம்பை வைத்துக் கொண்டு கண் கவரும் தன்மை வாய்ந்த ஓவியங்களை வரைந்ததை “வெண்சுதை விளக்கத்து வித்தகரியற்றிய, கண்கவர் ஓவியம்” என்று மணிமேகலை குறிப்பிடுகிறது. அரண்மனை மதிற்சுவர்களிலும், கோபுரங்களிலும், மண்டபங்களின் முகடுகளிலும், மாளிகையின் தூண்களிலும் சுவர்களிலும், படுக்கை அறையின் கட்டிலிலும், கட்டிலின்மேல் படுதாவிலும் வண்ண ஓவியங்கள் வரைந்து மகிழ்ந்திருந்தனர் என்று சங்க நூற்செய்திகளால் அறிகிறோம். ஓவியச் சாலைகள் அமைத்து போற்றி வந்ததை ‘வித்தக வினைஞர் புத்தியிற்குயிற்றிய சித்திரச் சாலை, என்று பெருங்கதை குறிப்பிடுகிறது.

அந்தக் காலத்தில், நாடக மகளிர் தமது நாட்டியத்திற்கான உறுப்பு அசைவுகளை எப்படி எப்படி அசைத்துக் காட்டுவது என்பதைக் கற்றுக் கொண்டனர் என்பதும், அதற்காக ஓவிய நூல்கள் இருந்தன என்பதும், அந்த நூல்களை நாடக மகளிர் கற்றுத் தேர்ந்தார்கள் என்பதும் “நாடக மகளிர்க்கு நன்கணம் வகுத்த, ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்” என்ற மணிமேகலை அடிகளால் அறியவருகின்றன. சங்க நூல்களில் வரும் சான்றுகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, திராவிடர்க்கென்று தனி ஓவியக்கலை மிகச் சிறந்த முறையில் தொன்று தொட்டு வளர்ந்து வந்திருக்க வேண்டும் என்பதை எளிதில் எவரும் புரிந்து கொள்ளலாம்

ஓவியங்களில் காணப்படும் உருவங்களைப்போன்ற வனப்புள்ளவர்கள் என்று ஒரு ஆணையும் பெண்ணையும் கூற வந்த மணிமேகலை ஆசிரியர் கூறுகிறார் என்றால், அந்தக் காலத்து ஓவியங்கள் எத்தன்மையாக விளங்கின என்பதை அறிந்து கொள்ளலாம். ஓவியங்கள் உடல்நிறத்தைத் தெளிவாக உணர்த்தும் வண்ண ஓவியங்களாகத் திகழ்ந்தன என்பதும், உருவங்களை உண்மை நிலை கெடாதவாறு, உள்ளது உள்ளபடியே இருக்குமாறு வரைந்தனர் என்பதும் தெரியவருகின்றன. இராசா இரவிவர்மா இந்தவழியைப் பின்பற்றினவர் என்பதிலிருந்து, அவர் இந்த நாட்டிற்கே உரித்தான இயற்கை ஓவியக்கலையை வளர்த்தவரேயல்லாமல், பிறநாட்டிற்கு ஓவியம் வரைவதில் அடிமை போனவர் அல்லர் என்பதை அறிந்துகொள்ளலாம்.

பண்டைக் கிரேக்கத்திலும் உள்ளது உள்ளபடியே வரைந்துகாட்டும் ஓவியக்கலையைத்தான் வளர்ந்து வந்திருக்கிறார்கள். கிரேக்கநாட்டில் ஓவியப் போட்டி ஒன்றில் இரு பெரும் ஓவியர்கள் அந்தக் காலத்தில் கலந்துகொண்டார்களாம். ஒருவர் திராட்சைக் குலைதள்ளிய திராட்சைக்கொடி ஒன்றை வரைந்து காட்டினாராம். ஓவியத்தை மூடியிருந்த துணியைப் பார்வையாளர்கள் விலக்கினார்களாம். உடனே சில கிளிகள் அந்த திராட்சைக்குலையை உண்மையான திராட்சைக்குலை என்று எண்ணிக்கொண்டு கொத்தித் தின்ன அருகேநெருங்கினவாம். பின்னர் அது திராட்சைக்குலை அல்ல என்பதை அறிந்து ஏமாந்து போயினவாம். இதைக் கண்டு எல்லோரும் வியப்புற்றினராம். பிறகு அவரோர் ஓவியனின் படத்தைப் பார்க்கப் பார்வையாளர்கள் அதன் அருகே சென்றார்களாம். அந்த ஓவியக்காரன் முதல் ஓவியக்காரனைக் கூப்பிட்டுத் தன் படத்தின் திரையை விலக்கும்படி கூறினானாம். முதல் ஓவியக்காரன் அவன் கூற்றை நம்பி திரை அருகே சென்று அதை விலக்கப்பார்த்தானாம். ஆனால் திரையை விலக்க முடியவில்லை. காரணம் இரண்டாவது ஓவியக்காரன் வரைந்த ஓவியமே திரையாகக் காட்சியளித்தது. எல்லோரும் பெரிதும் வியபபுற்றார்களாம். முதல் ஓவியக்காரன் கிளியை ஏமாற்றினான்; இரண்டாவது ஓவியக்காரன் முதல் ஓவியக்காரனையே ஏமாற்றினான். முதல் ஓவியக்காரனை

விட இரண்டாவது ஓவி
காரன் உள்ளதை உ
வாறு எழுதிக்காட்டுவ
மிகச் சிறந்தவன் என்று போ
றப்பட்டான். எனவே உ
லுள்ள எல்லா நாடுகளி
அந்த நாட்களிலும் சரி, இ
நாட்களிலும் சரி உண்மை
மாறுபடாத இயற்கை
யமே சிறந்த ஓவியமாகப் போ
றப்பட்டு வந்தது—வருகி
என்பதை நன்று அறியலா

இராசா இரவிவர்மாவி
உயிர் ஓவியங்கள் என்
அழியாதவை; என்றும்
கும் எல்லோராலும் போற்
படுபவை. இராசா இரவிவ
இல்லாவிட்டால் அழகான
வுளர்களே இந்து மதத்தின
குக் கிடைத்திருக்க மாட்
கள். அழகான இலட்சுமி
யும், சரஸ்வதியையும் உருவ
கித் தந்தவர் அவர்தான்.
வுளர்கள் எல்லாம் தம்மை
ருக உருவாக்கித் தந்தமை
இராசா இரவிவர்மாவுக்
அவர்கள் என்றென்றும் நன்
செலுத்தக் கடமைப்பட்டி
கிறார்கள்.

ஓவியக்கலை அழ
கலைக்கு அடிப்படையா
நாட்டில், வீட்டில், பொ
களில், மக்கள் தோற்றத்
நாம் அழகைக்காண வேண்
மானால் ஓவியக்கலையை சிற
முறையில் வளர்க்க வேண்

ம்கலிக்கெனவே வரை
படும் கேலி ஓவியங்கள் (கா
டூன்) தவிர மற்றவை யெல்ல
உண்மைக்கு மாறான கற்ப
யில் மூழ்காமல், உண்மை இ
கைநிலையைத் தழுவி நின்
தான் சிறந்தவை என்று போ
றுதற்குரியனவாகும். இரா
இரவிவர்மா வளர்த்த ஓவி
கலையைப் பின்பற்றி இக்கா
ஓவியர்கள் தமிழகத்தை-தி
விடத்தைப் பொலிவாக்க மு
வரவேண்டும். அகநானூ
புறநானூறு, பத்துப்பாட்
சிலப்பதிகாரம், மணிமேக
திருக்குறள் ஆகிய சிறந்த
களிலுள்ள சீரிய கருத்துக்
ஓவியங்களாக்கிக் காட்ட
வேண்டும். இதற்கு இக்கா
ஓவியர்கள் பெரிதும் முன்
வேண்டும். நாட்டிற்கு
தேவையான புதுமைக் க
துக்களையும், புரட்சிக் கருத்
களையும், பகுத்தறிவு அ
படையில் ஓவியங்களாகக்
டவும் அவர்கள் முன்வரு
வேண்டும்.

ஓவியக்கலையில் சிற
தொரு எதிர்காலத்தை
வாக்க இந்த விழா பயன்பட
யானால், நாட்டிற்கு நலம் ப
பதாகும். அந்தப்பயனை இ
விழாவின் மூலம் நாம் அ
வரும் எதிர்பார்ப்போமாக

வாழ்க இரவிவர்மாவின் புகழ்!
வாழ்க திராவிட ஓவியக்கலை!

“மன்றம்” அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்கள
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலை பேசி எண்: 55697)